1589

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

25 JUN 1956
15-6
1589
2-56

—: மதுராந்தகம் ஸ்ரீகருணைகரன் :—

JL
Q...
1956.15.6.
210729

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம்		பக்கம்
1.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	134
2.	தேச உலக ரக்ஷை [ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம் திருமலை தாதாசார்ய ஸ்வாமி, M.O.L. திருப்பதி.]	141
3.	ஸ்ரீ தேசிகப்ரபந்தம் (ஒரு பொது நோக்கு) [ஸ்ரீ. உப. திருப்பூந்துருத்தி. V. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி. மாம்பலம்]	145
4.	திறலனுமன் தெரிந்துரைத்த அடையாளம் [ஸ்ரீ. உப. ஒரகடம், கோ. ஸுதர்சனசார்ய ஸ்வாமி. அவளூர்.]	150
5.	43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்	154
6.	மஹாவீரவைபவம் [ஸ்ரீ. உப. வித்வான், ஸரளகவி, பாதூர், ராகவாசார்ய ஸ்வாமி, வ்யாகரணத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]	157
7.	ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயம் [ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M. A. B. L. அட்வோகேட், திருச்சி.]	161

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 15 } துர்முகி ௵ ஆனி மீ { ஸஞ்சிகை 6

‘𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌮𑍍
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥’

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌾𑌰𑍁𑌣𑍋𑌤𑍍𑌥𑌿𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥

𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த ‘ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா’ என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த ‘ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா’ என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஸர்வோதயம்

ஒருகாலத்தில் நாட்டில் உணவுப்பஞ்சம் ஏற்பட்டது. பல ஜனங்கள் ஆஹாரத்திற்கு வழியின்றி வாடி மடிந்தனர். ஜனங்கள் கூட்டங்கூட்டமாக ஆஹாரவஸதியை நாடி ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் சென்றுகொண்டேயிருந்தனர். அம்மாதிரியான கூட்டத்தில் ஓர் வயோதிகன் பசியின் கொடுமையினால் கண் முதலிய இந்த்ரியங்கள் சோர்வுற்று இளைப்பாரவேண்டிவந்தது. அவனை உற்சாகப்படுத்தி வழிநடையைத் தொடரமுயற்சித்த மற்றொரு இளைஞன் 'கஞ்சி வரதப்பா, எழுந்திரு' எனக் கூவினான். அதுஸமயம் அவர்கள் காஞ்சீபுரத்திற்கு ஸமீபம் வந்திருந்தமையால் அங்குசென்று வரதராஜப்பெருமாளை ஸேவித்தின்புறலாம் என அவன் கருத்து. ஆனால் வயோதிகனுக்கோ அதுவேறுவிதமாக மனதிற்பட்டது. ஆஹாரவஸதியின்றிப் படுத்தவன் அதிலேயே மனதைச் செலுத்திவந்தமையால் தனக்கு யாரோ ஓர் தர்மசிந்தனையுள்ளவன் கஞ்சிகொண்டுவருவதாக எண்ணிக்கொண்டு, உத்ஸாஹத்துடன் எழுந்து 'எங்கே வரதப்பா' எனக்கேட்டதாக நமது பெரியோர் கூறும் கதை நமக்கு இதுஸமயம் ஜ்ஞாபகத்தில் வருகிறது.

இதன் அடிப்படைத் தத்துவம் மனோதத்துவ ஆராச்சியே. ஒருவன் எதை விரும்புகிறானோ அதுவே அவன் கருத்தில் புலப்பட்டுக்கொண்டிருக்கும். இதை ஸம்ஸ்க்ருத கவிஞர் **'कामी स्वतां पश्यति'** என்று அழகாக எடுத்துக் கூறினார்.

இந்த அடிப்படையில் பல உயர்ந்த காரியங்களை நாம் ஸாதிக்கமுடியும். ஆன்மீக வழியிலாகட்டும், அரசியல் அரங்கிலாகட்டும் இதை வெற்றிகரமாகக் கையாளுபவன், தன் மனோபீஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்ளமுடியும். முற்காலத்து மதாசார்யர்கள் உயர்ந்த தத்துவங்களை இம்முறையைக் கையாண்டு பலஜனங்களை நல் வழிக்குக் கொண்டுவந்தார்களென்பது கண்கூடு. ஸுகித்திருப்பதிலே மனிதனுக்கு எப்பொழுதும் ஆசையுண்டு. ஆதலால் இவ்வுலகிலும், மறுஉலகிலும் எக்காலத்திலும் ஸுகித்திருக்கலாம் என்ற உண்மையைக் கூறி அதற்குத் தக்கபடி உலகில் கார்யக்ரமங்களை வகுத்தார்கள்.

இவ்வுலகில் ஸுகித்திருக்கப் பொருளாதார முன்னேற்றம் அவசியமாயிருப்பதாலிதையே அதிகமாக வற்புறுத்தி ஸர்வஸாதாரண ஜனங்களை வசப்படுத்திக் கொள்ளுகிறார்கள் அரசியல் வாதிகள். அரசியலுலகில் வெற்றி பெறுபவர் ஒவ்வொருவரும் தனது ஸமூஹத்தில் உள்ள மக்களின் இவ்வுணர்ச்சியைத் தட்டியெழுப்பி அதற்குத் தகுந்ததென்று சில புது வழிகளை வகுத்து வெற்றிபடைந்திருக்கிறார்கள். ஆனாலிம்முறைகள் தாத்காலிக வெற்றியையே தந்திருக்கின்றன என்பது உலக அரசியல் சரித்ரங்களைப் படித்தவர் அறிவர்.

மேனாட்டிலாகட்டும், நம் நாட்டிலாகட்டும் பழைய காலத்து அரசியல் வாதிகளும், இக்காலத்து அரசியல் வாதிகளும் சிறிது காலத்திற்கே போற்றப்பட்டார்கள். எதுகாலம்வரை அவர்கள் ஜனங்களின் ஆசையைப் பூர்த்தி செய்ய முடிகிறதோ அதுவரை கௌரவிக்கப் பட்டார்கள். எதுஸமயமவர்களுடைய கொள்கைகள் ஜனங்களுக்குப் பொருளாதாரத் துறையில் நன்மையைக் கொடுக்கவில்லையோ அதுஸம

டம் அவர்கள் தோல்வியை அடைந்தார்கள். சிலர் துக்ககரமான வாழ்வையும் முடிவையும் கூட அடைந்திருக்கின்றனர்.

ஆன்மீகவழியில் ஜனங்களை முன்னுக்குக் கொண்டுவந்த மஹர்ஷிகளும், ஆழ்வார்களும், ஆசார்யச்ரேஷ்டர்களுமெக்காலத்திலும் போற்றப்படுகிறார்கள். இக்காலத்திலும் இம்மாதிரியான மஹான்கள் ஆங்காங்கு இருந்துகொண்டு நம்போன்ற ஜனங்களின் ஆன்மீக, பொருளாதார முன்னேற்றங்களுக்குப் பாடுபடுகிறார்கள். ஸமூஹத்தில் பகுத்தறிவுள்ள ஒவ்வொருவரும் தற்கால நிலையை நன்கு கவனித்து அதற்குள் நல்ல நிலையைத் தேடிக்கொள்ளவேண்டியது மிகவும் அவசியமாகும்.

ஸமீபகாலத்தில் நமது ஸமூஹத்தில் ராமராஜ்யம், சோஷலிஸ ஸமுதாயம், ஸர்வோதயமென்ற பல சொற்களைக் கேள்விப்படுகிறோம். இம்மாதிரியான சொற்களும், இவைகளின் கருத்துக்களும் நமக்கு ஸுகத்தையே கொடுக்கும் எனப் பலர் கூறுகின்றனர். பலர் நம்பிக்கொண்டிருக்கின்றனர். பலர் ஏமாந்தும் இதரர்களை ஏமாற்றிக்கொண்டும் இருக்கின்றனர். உண்மை எப்படியிருப்பினும் இக்கருத்துக்களை நாம் நிச்சயமாக ஆதரிக்கிறோம். ஆதரிக்கிறோம் எனக் கூறுவதில் அர்த்தமில்லை. இக்கருத்துக்கள் ஆதரிக்கவேண்டியவைகளே. கருத்தில் வேற்றுமை இல்லை. ஆனால் இம்மாதிரியான கருத்துக்களை வெற்றிகரமாக்கும் முறைகளிலும் கொள்கைகளிலும் பல அபிப்ராய வேற்றுமைகள் இருக்கின்றன.

சில முறைகள் நமக்கு உகந்தவைகள், சில தகாதவைகள். ராமராஜ்யத்தில் வர்ணிக்கப்பட்ட உண்மையான நிலை இனியும் நம் காலத்தில் வரும் என எண்ணுவது கானல் நீருக்கு ஒப்பானதுதான். அதேபோல்தான் 'வேற்றுமையற்ற ஸமூஹ அமைப்பும்.' 'இதைக் காட்டிலும் சாத்யமில்லாததெனக் கூறலாம் 'ஸர்வோதயம்' எனப்படுவதும்.

'ஸர்வோதயம்' என்பதினால், இருளினால் பயந்து கிடக்கும் ஓர் மனிதனுக்கு ஸூர்யோதயத்தினால் ஏற்படும் ஆனந்தம் ஏற்படப்போவதாக எண்ணுவது 'குதிரைக் கொம்பை' விரும்புவதாகும். கொம்புள்ள ஏதாவது ஒரு மிருகத்திற்கு குதிரைஎன்று பெயரிட்டு நாம் திருப்தியடைய ஆசைப்படலாம்.

இப்பொழுது உத்தேசிக்கப்படும் 'ஸர்வோதயம்' ஏற்படவிருக்கும் ஸமுதாயத்தில் வித்யாஸங்களே இருக்காதாம். ஜாதி வித்யாஸமொழிக்கப்படுமாம். பணக்காரன், ஏழை என்ற வித்யாஸம் அகற்றப்படுமாம். இவைகளுக்கு அநுகுணமான முறைகளைக் கையாளுவார்களாம். இந்த அமைப்பை விரும்புபவர்கள், பொருளாதாரத்துறையில் வித்யாஸத்தையொழிக்க 'பூதானம்' 'ஸம்பத்தானம்' போன்ற இயக்கங்களை ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்துவார்களாம். மற்றைய வித்யாஸங்களை ஒழிக்க அதற்கு அடிப்படையான தத்துவத்தை அகற்ற முயற்சிப்பார்களாம்.

உலகில் ஜனிக்கும்பொழுதே ஒரு சிசுவிற்கு அறிவு ஏற்பட்டிருக்கிறது. ஆயினும் சூழ்நிலையினாலும், வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்ச்சிகளினாலும் அறிவு வளர்ச்சியில் மாறுபாடுகள் ஏற்படுகின்றன. செயற்கைக் காரணங்கள் நமது ஸமூஹத்தை பஹுவாக பாதிக்கக்கூடும். சென்ற நூற்றாண்டில் நமது கல்வி நிலயங்களை தமது ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டு அதன் மூலமாக மேனாட்டார் தமது மதக் கொள்கைகளை நமது ஸமூஹத்தில் புகுத்தி, இந்த நூற்றாண்டில் அவர்களுடைய மதத்தை நமது நாட்டில் ஓர் ஸ்திரமான அடிப்படையில் ஊன்றிவிட்டார்கள். இந்துமதமே, மதமாக இருந்த நமது நாட்டில் கிருஸ்துவமதம் எவ்வளவு சலுகைகளைப் பெற்றிருந்தது, பெற்றுமிருக்கிறது என்பதை நாம் அறிவோம். இதை வெற்றிகரமாக ஸாதித்தவர்கள் அரசாங்க ஆதரவு பெற்றவர்களே. இவர்களும் நமது கல்விநிலயங்களையே தங்களுக்கு ஸாதகமாக்கிக்கொண்டு வெற்றி பெற்றனர்.

'எறும்பு ஊறக் கற்குழியும்' என்ற பழமொழிக்கொப்ப இவர்கள் அடிக்கடி இளம் உள்ளத்தில் தங்களது கொள்கைகளை எடுத்துக் கூறி

மாணவ, மாணவிகளின் உள்ளங்களைத் தங்கள் வசமாக்கிக் கொண்டனர். பலவிடங்களில் பொருளாதார ஆதரவைக் காட்டி இவர்கள் வெற்றி பெற்றனர். நாளடைவில் இவர்களின் பல கொள்கைகளை அநேகமாக மேனாட்டுக் கல்வி முறையில் பயிற்சி பெற்ற பலருமேற்றுக்கொள்ளவாரம்பித்தனர்.

இம்மாதிரியான நிலையைக் கொண்டுதான் நம் நாட்டில் ஆதாரக்கல்வி என்ற ஓர் புது முறையை ஏற்பாடு செய்ய பலர் ஆசைப்படுகின்றனர். இம்முறைக் கல்வியின் அடிப்படைத் தத்துவம் வெளித் தோற்றத்திற்குத் தொழில்முறையைப் போற்றுவதாகத் தோன்றினாலும், வகுப்பு, ஜாதி வித்யாஸங்களை அகற்றுவதுதானாகும். 'இளமையிற்கல்' என்றபடி சிறுவயதில் இம்மாதிரியான கொள்கைகளை சிறு உள்ளங்களில் இடம் பெறும்படிச் செய்தால் அவர்களுக்கு வயது வந்த காலங்களில் முழுப் பலனையும் அடையலாம் என்பதுதான் இம்முறையைக் கையாளுபவர்கள் நம்பிக்கை. இவர்களின் அபிப்ராயமும் வெற்றி பெறக்கூடியதுதான். ஆதலால்தான் நமது சிறுவர்களுக்கு நமது ஸமூஹத்திற்கு உகந்த கல்வியை போதிக்கவேண்டும் என்று நமது ஆசார்யோத்தமர்கள் பாடுபடுகின்றனர்.

பொருளாதாரத்துறையே நமக்கு எக்காலத்தும் வேண்டுவது என்று எண்ணும் நமது ஸமூஹத்தினர் தமது கருத்துக்களை மாற்றிக்கொண்டு, ஆந்மீகவழிக்கும் உலகவாழ்க்கைக்கும் சேர்ந்தே நற்பலன்களை அளிக்கக்கூடிய ஸமூஹவாழ்க்கைவசதிகளைஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இம்மாதிரியான வாழ்க்கை வசதிகள் பிற்காலத்தில் நமது ஸமூஹத்தைக் காப்பாற்ற உதவும் என்பதுமட்டிலும் அல்லாமல் ஸமூஹத்தை நசிக்காமலும் செய்ய உதவும்.

இவ்வசதிகள் இல்லாமற்போனால் நமது கொள்கைகளைக் கொண்ட ஸமூஹமே வெகு சீக்கிரத்தில் அழிந்துபோகும் என்பது திண்ணம்.

* * * * * * *

மேலே கூறிய கருத்துக்களை மனத்திற்கொண்டுதான் நமது ஆசார்யோத்தமராகிய ஸ்ரீமதழகியசிங்கர் நமது இந்து ஸமூஹத்திற்கென்று ஓர் கல்வித் திட்டத்தை வகுத்து, அதை ப்ரசாரப்படுத்த பற்பல விடங்களில் ஸ்தாபனங்களை ஏற்படுத்தியுள்ளார்கள். ஆந்மீகத்துறையில் மட்டில் இல்லாமல் நவீநபொருளாதாரத் துறையில் முன்னேறுவதற்காகவே அரசாங்கப் பரீட்சைகளுக்கு அனுப்பப்படும் முறைகளும் கையாளப்பட்டு வருகிறது.

பெற்றோர்கள் தங்களுக்கு வெளிப்படையாகத் தோன்றக் கூடிய சில அற்பக் காரணங்களால் பெருவாரியாக இக்கொள்கைகளைப் பின்பற்றத் தயங்குகிறார்கள். இத்தயக்கத்தை விட்டு எல்லோரும் அல்லது பெருவாரியாகவாவது தங்களுடைய குழந்தைகளை இத்திட்டத்தின் கீழ் கல்வி பயிலுவதற்கு ஏற்பாடு செய்தார்களேயானால் நமது ஸமூஹத்திற்கு ஓர் க்ஷேமகாலம் ஏற்படுமென்பது உண்மை.

ஸ்ரீ:

தேச உலக ரக்ஷை

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

18. பிறநாட்டாரின் மதிப்பு

இப்படி ஆத்மாவை மறக்காமலும் அதன் சக்தியின் வளர்ச்சிக்குத் தடை ஒன்றுமில்லாமலும் உலகவாழ்க்கைக்கு வேண்டிய ஸர்வ ஸௌகர்யங்களையு முண்டாக்கிக்கொண்டு நமது முன்னோர்கள் ஸுகமாக வாழ்க்கையை நடத்தி வந்தார்களாகையால் நமது நாடு மிக உயர்ந்த நிலையிலிருப்பதாகக் கருதப்பட்டு பிறநாட்டார் யாவரும் கொண்டாடும்படியும் இதைப் பின்பற்றித் தமது நாட்டின் நிலைமையை அமைத்துக் கொள்ளும்படியும் இருந்துவந்தது.

19. தர்ம மார்க்கச் சிறப்பு

ஆயுர்வேதம், தனுர்வேதம், சில்பம், கணிதம், ஜ்யோதிஷம், சித்திரம், ஸங்கீதம், நாட்டியம் என்ற இத்துறைகளிலும் நம் பூர்வபுருஷர்களின் புத்தி, எவ்வளவு தூரம் செல்லக்கூடுமோ அவ்வளவு தூரஞ்சென்று தேர்ச்சி பெற்றிருக்கின்றது. ஆயினும் மிகுந்த ஆத்மசக்தியும் உத்தமமான ஆசாரவ்யவஹாரங்களும், நன்கு பரிபாலிக்கப்பட்ட தர்மநெறியும்விளங்க அதனால் வெகு அமைதியாகவும் ஸுகமாகவும் ஜனங்கள் வாழ்ந்ததே இந்நாட்டின் மேன்மைக்கும் மதிப்புக்கும் ஸர்வப்ரதான காரணமாயிற்று. பிறநாட்டார் தமது இதிஹாஸபுராணங்களைக் கற்றார்கள். 'பழக்கவழக்கங்களைக் கைக்கொண்டார்கள்.

20. நாட்டின் வீழ்ச்சி

காலக்ரமத்திலரசர்கள் நாட்டின் மஹோன்னத நிலைக்குக் காரணமான உயர்ந்த லக்ஷ்யங்களை மறக்க ஆரம்பித்தனர். அவர்களுடைய ஆத்மசக்தி, தத்வஜ்ஞானம், நடவடிக்கை, இவற்றில் குறைவு உண்டாயிற்று. சாஸ்திரங்களைக் கற்று அவற்றில் விதிக்கப்பட்ட கர்மாக்களை அநுஷ்டிப்பதையே ப்ரதானமாகக் கொண்டவர்களும் அரசாங்கநிலையைப்பற்றிச் சிந்திக்காமல் இருந்து விட்டனர். இப்படி இவ்விரு சாராரும் போதிய அளவு நெருங்கிப் பழகாமல் தனித்தனியே நின்றபொழுதே நம் நாட்டின் வீழ்ச்சி ஆரம்பமாயிற்று.

அதன்பிறகு பல அரசர்களும் பலவித ஆட்சிகளும் மாறிமாறி வந்துபோய்க்கொண்டிருந்தபோதிலும் அநாதிகாலமாக வந்த வாஸனையினால் ப்ரஜைகளின் வாழ்க்கையில் திடீரென்று அதிக மாறுதல் ஏற்படாமல் அநேகமாய் எல்லாம் முன் போலவே நடந்துவந்தது. தத்வஜ்ஞானம் குறைந்துவிட்டபோதிலும் அவரவர்களுடைய மதஸம்பந்தமான ஆசாராநுஷ்டானங்கள் ஒருவாறு நடந்து வந்தன. அவற்றுக்குத் தடை ஒன்றும் உண்டாகவில்லை. பிறநாட்டார் சிலர் படையெடுத்து வந்து கோயில்களைத் தகர்த்தும் பலாத்காரமாக மதமாற்றம் செய்தும் துன்பத்தை விளைவித்தார்களாயினும் இத்தேசத்திலேயே நிலைத்து நின்ற அவர்கள் காலக்ரமத்தில் நமது மதப் பெருமையை உணர்ந்து அதில் வைரம் பாராட்டாமலும் சாஸ்திரங்கற்றவர்களை ஆதரித்தும் வந்தார்கள். பிறகு அரசாண்ட ஆங்கிலேயர்களும் நமது மதவிஷயங்களில் தலையிடாமல் இருந்தார்கள். ஆனால் இவர்கள் ஏற்பாட்டின்படி நடத்தப்பட்ட பள்ளிக்கூடங்களில் படித்த நமது ஜனங்கள் நாள் ஆகஆக நம்மதத்தில் பற்றுகுறைந்து மேல் நாட்டுப் பழக்கவழக்கங்களையே மேற்கொள்ளத் துணிந்தார்கள்.

21. மத அழிவு

இந்நிலையில் நாடு சுதந்திரம் பெற்றது. இதன் பலனாக நாம் காண்பதென்னவெனில் மஹர்ஷிகள் எனத்தக்க முழுஜ்ஞானிகளும் ராஜர்ஷிகள் எனத்தக்க தார்மிக அரசர்களுமிராமல் குன்றிக்கொண்டேவந்து மிகவும் ஈனஸ்திதியிலிருந்த நமது ஸநாதநமதத்தை இருந்த இடமே தெரியாமல் வெகு விரைவிலேயே அழித்துவிடுவதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளையும் செய்ய அதிகாரம் பெற்றிருப்பதுதான். வேதங்கள் ஓதப்படுகின்றனவா என்றுகேட்பா

ரில்லை. சாஸ்திரங்கள் கற்கப்படுகின்றனவா என்று சிந்திப்பாரில்லை. வெகுகாலவழக்கத்தை யனுஸரித்து சுதேச மன்னர்கள் சிறிதளவு வேதசாஸ்த்ரங்களைக் கற்ற வித்வான்களை ஆதரித்து வந்தார்கள். நமக்குச் சுதந்திரங்கிடைத்தவுடனே அவர்கள் தமது ராஜ்யங்களை இழந்தார்களாகையால் அவர்கள் காட்டிய சிறிது ஆதரவும் இவர்களுக்கு இல்லாமற்போயிற்று.

22. ஸம்ஸ்க்ருதத்தின் துர்தசை

படித்தவர்களுக்கு அரசாங்க உத்யோகமே பிழைப்புக்கு வழியாகி விட்டது. உத்யோகங்களில் ப்ராசீன சாஸ்திரங்களைக் கற்று ஸம்பாதித்த அறிவிற்கு உபயோகமில்லாமையால் அவற்றைக் கற்பவர்களின் எண்ணிக்கை மிகக் குறைந்து விட்டது. ஸம்ஸ்க்ருதத்தில் பலருக்குப் பற்றும் ச்ரத்தையும் இருக்கின்றன. அதன் வ்ருத்திக்காகப் பாடுபட்டும் வருகின்றனர். ஆனால் உலக வாழ்க்கையோடு அதற்கு ஸம்பந்தமில்லை என்ற நிலை ஏற்பட்டுவிட்டபடியால் அதைக் கற்கச் சிறுவர்கள் முன் வருவதில்லை. இந்த ஸ்திதி நீடித்திருக்கும்வரை எவர் எவ்வளவு முயற்சி செய்தாலும் அது பலிக்குமென்று நினைக்க இடமில்லை.

23. ஆசார அநுஷ்டான லோபம்

சாஸ்திரங்களின் க்ஷீணதசை இப்படியிருக்க அவற்றில் விதிக்கப்பட்ட ஆசாரங்களும் கர்மாநுஷ்டானங்களுங்கூட அவற்றின் முக்கிய உத்தேசத்தை யாவரும் மறந்துவிட்டபடியாலும் அரசாங்கத்தில் பெரியோர் என்று கருதப்பட்டவர்கள் அவற்றில் ஆதரவு காட்டவில்லை என்பது மட்டுமல்லாமல் வெறுப்பையும் த்வேஷத்தையும் காட்டுகின்றபடியாலும் அநேகமாய் முற்றிலும் கைவிடப்பட்டன. வம்சபரம்பரையாக அநுஷ்டிக்கப்பட்டுவந்த அவற்றை விடுவதற்கு மனம் வராமல் சிலர் இன்னும் அநுஷ்டிக்கின்றார்களாயினும் கீழ் ஸந்ததியிலுள்ளவர்கள் அவற்றை மிக அநாதரித்தே வருகின்றனர். நவீனமுறையில் வாழ்க்கையை நடத்துகின்ற அவர்களுக்கு அவற்றில் அவமதிப்பு வெகு அதிகம்.

24. ஸத்யம் ருதம்

வேதங்கள் உபதேசிக்கும் உண்மை ஸத்யமென்றும், ருதமென்றும் இரண்டு விதமாயிருக்கும். ஸத்யம் என்பது எவ்வித வேறுபாடுமில்லாமல் எப்பொழுதும் ஒரேவிதமாக விளங்கும் பரம்பொருள். ருதம் என்பது அதற்கு ஆராதனம் அல்லது பூஜை என்ற முறையில் நாம் அவச்யம் செய்யவேண்டியதாக விதிக்கப்பட்ட கர்மா. இது வடமொழியில் யஜ்ஞமெனப்படுகின்றது. தமிழில் வேள்வி எனப்படுகின்றது. இவற்றில் ஸத்யத்தை விட்டு ருதத்தை மாத்திரம் பற்றுவதும் ருதத்தை விட்டு ஸத்யத்தை மாத்திரம் பற்றுவதும் பயன்படாது. இரண்டையுமே பற்றவேண்டுமென்று வேதம் வற்புறுத்துகின்றது. தத்காலம் பரம்பொருள் ஒன்று உண்டு என்ற நம்பிக்கையோடும் அதனிடத்தில் மிகுந்த பக்தியோடுமிருப்பவர்கள்கூட சாஸ்திரம் விதித்த கர்மாவின் விஷயத்திலும் அதற்குரிய ஆசாரங்கள் விஷயத்திலும் சிறிதும் நம்பிக்கையில்லாமல் இருக்கின்றார்கள். இவற்றின் உத்தேசமும் ப்ரயோஜனமும் முற்றிலும் மறக்கப்பட்டபடியால் இவைகளனாவச்யங்களென்றும் மூடநம்பிக்கையினால் சிலர் செய்து வருகிறார்களென்றும் தூஷணம் செய்கின்றனர். வர்ணங்களென்றும், ஆச்ரமங்களென்றும், உபநயனம், விவாஹம் முதலிய ஸம்ஸ்காரங்களென்றும் உள்ள வ்யவஸ்தைகள் யாவும் கீழ் விளக்கியபடி உலகம் முழுவதும் க்ஷேமமாயிருப்பதற்காக அவச்யம் செய்யப்படவேண்டிய கர்மாக்கள் செவ்வையாய் நடைபெறுவதற்காகவே ஏற்பட்டவை. அக்கர்மாக்கள் அநுஷ்டிக்கப்படாமல் கைவிடப்பட்டனவாகையால் இந்த வ்யவஸ்தைகளும் அர்த்தமற்றவையாகிவிட்டன. அர்த்தமற்றவையென்பது மட்டுமல்லாமல் மூடஜனங்கள் வேற்றுமை பாராட்டிக் கலஹம் செய்வதற்குக் காரணமாகின்றனவாகையால் இவற்றை ஒழிக்கவேண்டுமென்று நாட்டின் நலத்தைக் கருதும் பலர் வெறுக்கும்படியான விஷயங்களாகவுமாகிவிட்டன. தாத்காலிக ஸுகமொன்றே விவாஹத்தின் உத்தேச்யம் என்ற எண்ணம் உண்டாகிவிட்டபடியால் ப்ராசீனமான நமது விவாஹமுறை வெகு ஆக்ரஹத்தோடு பாழ்படுத்தப்பட்டு வருகின்றது.

25. நாஸ்திகம்

இப்படி அநாதிகாலமாக அநுஷ்டிக்கப்பட்டு வந்த தர்மங்கள், அவற்றுக்காக வேண்டிய ஆசா

ரங்கள், ஸம்ஸ்காரங்கள், இவையெல்லாம் செவ்வனே நடைபெறுவதற்காக ஏற்பட்ட ஜாதிவ்யவஸ்தைகள், இவற்றை விதிக்கும் சாஸ்திரங்கள் இவற்றுக்கு மூலாதாரமான வேதங்கள், இவை யாவும் எதில் எழுதப்பட்டிருக்கின்றனவோ அந்த பாஷையாகிற ஸம்ஸ்க்ருதம் இவையெல்லாம் மறைந்துவிட்டன. மிகுந்த சிலவும் மறைந்துவருகின்றன. 'இவை நமக்கு எவ்விதத்திலும் இனித் தேவையில்லை. அழிந்து போனால் நமக்கு எவ்விதக் குறைவுமில்லை. அழியவேண்டியதும் நாம் அழிக்க வேண்டியதுமவச்யமென்ற எண்ணங்கள் நாட்டுத் தலைவர்களுக்குள்ளேயே பலருக்கு உறுதியாக உண்டாகியிருக்கின்றதாகத் தோன்றுகிறது.

இவ்விஷயத்தை விவேகிகளாய் நாட்டின் நலத்தைக் கோருகின்றவர்களாயிருக்கும் ஸஜ்ஜனங்கள் நன்றாக ஆலோசித்துப் பார்க்கவேண்டும். இவையெல்லாம் போனபிறகு ஹிந்து மதமெனப்படுகிற நமது ஸநாதன மதத்தில் மிகுந்ததென்னவிருக்கின்றது? ராம, க்ருஷ்ண என்ற சொற்களைச் சிலபேர் இன்னும் சிறிது காலம் சொல்லிக் கொண்டிருக்கலாம். தீபாவளி, பொங்கல் பண்டிகைகளைப் பலர் கொண்டாடிக் கொண்டிருக்கலாம். சிறுவர் யாவரும் பள்ளிக்கூடங்களில் படிக்க ஆரம்பிப்பது முதல் மேனாட்டு நாகரிக முறையிலேயே பழகி வருகின்றார்களாகையால் இன்னும் சில வருஷங்களில் முற்றிலுமே மாறிவிடுவார்கள் என்பதில் ஸந்தேஹமில்லை. மதத்திற்குமூலாதாரமான சாஸ்திரங்கள் மறைந்த பிறகு சிலருக்குள்ள மதப்பற்றும் வேரூன்றாமல் வெகு துர்பலமாகவிருக்கும். பிறமதத்தார் நம்மதத்தைப் பற்றிச் சொல்லும் குறைகளுக்குப் பதில் கூற மாட்டாமல்ஜனங்கள்யாவருமேவேறொருமதத்தினராகமாறிவிடவும் கூடும். மாறாமல் சிலர் இருந்தாலும் அவர்கள் நாஸ்திகர்களாகத்தான் இருக்க முடியும். எதைப் பின்பற்றி நமது நாடு ஸுகமாக வாழ்ந்து உலகத்தில் மிக மதிக்கப் பெற்றுவிளங்கியதோ அந்த ஸநாதந தர்ம மார்க்கத்தை அடியோடு அழித்துவிட்டு நமது பாரதநாட்டைகீழ்த்திசை ஐரோப்பாவாக ஆக்கவேதாம் ஸ்வாதந்தர்யத்தையடைந்தோமென்றால் இதைக்காட்டிலும் வருந்தத்தக்க விஷயம் வேறுஎன்ன இருக்கிறது.

26. மேனாட்டாரைக் காட்டிலும் நமக்குள்ள வேற்றுமை

பணத்தின்மேல்படுத்துப் புரண்டு கொண்டிருக்கும்நாட்டிலுள்ளவர்களும்மனதுக்கு சாந்தியும் நிம்மதியும் உண்டாகாமல் நமது நாட்டிலிருந்து அவற்றைத் தரக்கூடிய ஆத்மஜ்ஞானத்தை அடைய விரும்புகின்றார்கள். நமது நாட்டில் ஆத்மஜ்ஞானத்தைப் பெறுதற்குரிய எந்த மார்க்கம் இப்பொழுது நடைமுறையில் இருக்கின்றது? கல்வி, உடை, நடவடிக்கை, அரசாங்கம்என்ற இவை முதலிய எல்லா விஷயங்களிலுமே நாம் மேனாட்டாரைப் பின்பற்றி அவர்கள்போலவே ஆகிக்கொண்டு வருகிறோம். 'எங்களுக்குமட்டும் ஆத்மஜ்ஞானமேது? எல்லா விஷயங்களிலும் உங்களைப்போலவேதான் நாங்கள். ஆகிலும் நீங்கள் பணக்காரர்கள். நாங்கள் ஏழைகள், இவ்வளவுதான் பேதம்' என்று தான் நாம் பதில் சொல்லவேண்டும். ஆனால் உண்மையில் நாம் இருக்கவேண்டிய நிலை இதுவன்று. இந்த ப்ரகரணத்தில்தான் நமது புராதன நிலையை நாம் நன்கு ஆராய்ந்து அறிய வேண்டும்.

27. தைவம்

நாம் சுகமாக வாழ்வதற்கு வேண்டிய ஸகல ஸௌகர்யங்களையும் நாமே நமது புத்திபலத்தாலும் சரீரபலத்தாலும் செய்துகொள்ளலாம். வேறொன்றையும் அபேக்ஷிக்கவேண்டியதில்லை' யென்ற எண்ணமுள்ளவர்கள் எவ்வளவு புத்திசாலிகளாயிருந்தாலும் பெரிய மனிதராயிருந்தாலும் மூடர்களே. அவரால் உலகம் கஷ்டப்படும். நடந்த ஆறு ஏழு வருஷங்கள் மழை இல்லாமலும் ஒன்றிரண்டு வருஷங்களாக அதிக மழையினாலும், பூச்சி உபத்ரவத்தாலும் நாம் அனுபவித்த கஷ்டங்களுக்கு அளவேயில்லை. 'என்னை மறந்து நீங்களே உங்கள் முயற்சியினால் உங்கள் கார்யங்களைச் செய்துகொள்ள முடியாது' என்று நமக்கு ஸ்பஷ்டமாய் அறிவிப்பதற்காகத் தைவம் செய்த எச்சரிக்கையே இது என்பதை விவேகிகள் உணரவேண்டும்.

28. முன்னோர் காட்டிய வழி

நமது என்ற அபிமானத்தினாலேயே நம் முன்னோர்கள் அனுஸரித்த தர்மவழியில் நமக்கு மிகுந்த ச்ரத்தை இருக்கவேண்டியது நியாயம். அதுவேயன்றி அரசன் ஒருவன் இராமல் அரசாங்கப் பொறுப்பு முழுவதும் நம்மீதே விழுந்திருப்பதால் கோடிக்கணக்கான ஜனங்கள் அன்னவஸ்திரங்களைப் பெற்று ஸௌக்யமாக ஜீவிப்பதற்கு என்ன வழி? எந்த வழி முற்காலத்தில் அனுஸரிக்கப்பட்டது? நமது புராதன நூல்கள் இதைப்பற்றி ஏதாவது உபதேசிக்கின்றனவா? என்று நாம் எல்லோரும் மிகுந்த கவலையுடனும் பயத்துடனுமாராய்ந்து பார்க்க வேண்டியது மிக அவச்யம். தபோமஹிமையினாலும் அநாதிகால அனுபவத்தினாலும் உண்மை இது எள்று நிச்சயித்து உலகமெல்லாம் சுகமாக வாழவேண்டுமென்கிற ஒரே நோக்கத்தோடும் மிகுந்த கருணையோடும் நமது முன்னோர்களால் வகுக்கப்பட்டு நமது நாட்டின் ஸர்வ மேன்மைக்கும் காரணமாயிருந்த சிறந்த வழியை அநாதரித்துவிட்டு மேனாட்டாரின் பழக்கத்தாலே எல்லா விஷயங்களிலும் அவர்கள் போலவே ஆகி, நமது நாடு தனது ஆத்மாவை இழந்து கீழ்த்திசையிலுள்ள மற்றொரு ஐரோப்பா, அல்லது அமெரிக்கா என்றாகும்படி செய்து, சாந்தியென்பது சிறிதுமில்லாமல் அந்நாட்டாருக்குள்ள கஷ்டங்களையெல்லாம் நமக்கும் உண்டாக்கிக் கொண்டு அவதிப்படுவது எவ்வளவு வருந்தத்தக்க விஷயமென்பதைச் செவ்வையாக ஆலோசித்துப் பார்க்க வேண்டும். முரட்டுத்தனமாகத் தம் புத்திக்கு எட்டியதே உண்மையென்றும் நியாயமென்றுமெண்ணிக்கொண்டு முன்னோர்களின் உபதேசத்தை உதாஸீநம் செய்வது சிறுபிள்ளைத்தனமாகும். பொறுப்பில்லாத் தன்மையாகும். சாஸ்திரங்கள் எனப்படுகின்ற அந்த உபதேசங்கள் எப்படி நமக்கு உதவுகின்றனவென்று சிறிது பார்ப்போம்.

29. பரமாத்ம ஜ்ஞானம்

பரமாத்மா என்றும், பரப்ரஹ்மம் என்றும் சொல்லப்படுகின்ற ஸர்வேச்வரன் ஒருவனிருக்கின்றான். அவன் உலகத்தை ஸ்ருஷ்டித்துக் காத்து அழிக்கின்றான். அவன் கட்டளைப்படி நடப்பது புண்யம். அதற்கு விருத்தமாக நடப்பது பாவம். அவன் இருக்கின்றானென்பதை எந்த மனிதன் அறியவில்லையோ அந்த மனிதன் இல்லாதவனேயாவான். மனிதன் இருக்கின்றான் என்பதற்கு லக்ஷணம் அல்லது அடையாளம் ஈச்வரன் இருக்கின்றானென்று அறிவதே. இந்த லக்ஷணமில்லாதபோது அம்மனிதன் இல்லாதவனாகவே ஆகின்றான் என்பதில் ஸந்தேஹமில்லை. தனக்கு நல்லது எது கெட்டது எது என்பது அவனுக்குத் தெரியாது. ஆசையால் தோன்றியபடிச் செய்து தானும் கெட்டுப் பிறருக்குந் துன்பத்தை விளைவிப்பான். இதற்கு நேர் மாறாக உலகத்தையெல்லாம் படைத்தவன் ஒருவன் இருக்கின்றானென்பதை நிச்சயமாக உணர்ந்தவன் உலகமெல்லாம் ஒரு பெருங்குடும்பமென்று கருதி பேதபுத்தியும் அதனாலுண்டாகக்கூடிய த்வேஷம் வெறுப்பு முதலியனவும் இல்லாதது மட்டுமின்றி எல்லோரிடத்திலும் அன்புள்ளவனாகவும் பகவானுடைய ஸங்கல்பப்படி எல்லாம் நடக்கின்றதென்கிற எண்ணத்தினால் ஸம்பத்து உண்டானபோது அஹங்காரப்படாதவனாகவும் ஆபத்து உண்டானபோது வருந்தாதவனாகவும் இருந்து ஸுகப்படுவான்.

30. பயம் ப்ரீதி கைங்கர்யம்

எல்லாவற்றையும் அறியக்கூடியவனாய் அதனால் ஸர்வஜ்ஞனென்று ப்ரஸித்தனாயிருக்கின்ற பகவான் எங்குமிருந்து எவ்வளவு ரஹஸ்யமாகச் செய்த தீச்செயல்களையுமறிந்து தண்டிப்பான் என்ற உண்மை ஜனங்களின் மனஸ்ஸில் செவ்வையாகப் படிந்தால் பொய் சொல்லவும் திருடவும் பிறருக்கு ஹிம்ஸை செய்யவும் துணியமாட்டார்கள்.

நமக்கெல்லாம் அதிபதி பகவான். அவனுடைய ப்ரீதியே நமக்கு க்ஷேமத்தைத் தரும். அவனே இவரிவர் இந்த இந்த தொழில் செய்யவேண்டுமென்று விதித்திருக்கின்றான். இப்படி நமக்கு விதிக்கப்பட்ட தொழிலெல்லாம் அவனுடைய கைங்கர்யமே; என்கிற இவ்விவேகத்தை த்ருடமாகப் பெற்றால் தாம் செய்யும் தொழில்களை மிகுந்த உத்ஸாஹத்தோடும் ப்ரீதியோடும் உறுதியோடும் செய்வார்கள்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீதேசிகப்ரபந்தம்

உலகத்திலுள்ளோர்களெல்லாம் அநுஸந்தானம் செய்து உஜ்ஜீவனத்தையடையட்டும் என்று தம்முடைய மிகுந்த கருணையினால் ஸ்ரீமத்வேதாந்த தேசிகன் அனேகம் தமிழ்ப் பிரபந்தங்களைச் செய்தருளியுள்ளார். அவைகளைப் பொதுவாக 'ஸ்ரீதேசிகப்பிரபந்தங்கள்' என்று வ்யவஹரித்து வருகிறோம். மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களுடைய அருளிச்செயல்களுக்கு திவ்யப்பிரபந்தங்கள் என்று அஸாதாரணமானப்ரஸித்திஏற்பட்டுள்ளதுபோல ஸ்ரீதேசிகனுடைய ப்ரபந்தங்களுக்கு ஸ்ரீதேசிகப்பிரபந்தங்கள் என்று ப்ரஸித்தமான பெயர் ஏற்பட்டுள்ளது. இவைகளை ஸ்ரீதேசிகமாலை என்றும் வ்யவஹரிப்பதுண்டு.

தமிழ்ப்பிரபந்தங்கள் அமைப்பதில் ஆழ்வார்களே வழிகாட்டிகளாக விளங்குகிறார்கள். ஆழ்வார்களுடைய ப்ரபந்தங்களை அநுஸரித்து ஸ்ரீதேசிகன் தமது ப்ரபந்தங்களை அருளிச்செய்துள்ளார். பிற்காலத்தில் ப்ரஸித்தியோடு விளங்கிய திவ்யகவி பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் என்னும் கவியும் ஆழ்வார்களை அடியொற்றி எட்டுப்பிரபந்தங்கள் அமைத்துள்ளார். அவைகளுக்கு அஷ்டப்பிரபந்தம் என்ற பெயர் வழங்குகின்றது. ஸ்ரீதேசிகன் அருளியவைகளும், பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் செய்தவையுமான இந்தப் பிரபந்தங்களெல்லாம் ஆழ்வார்களின் அருளிச்செயல்களை அடியொற்றி அவதரித்தமையால் வைணவஸம்ப்ரதாயத்தின் தத்வங்களாகிற ரத்னங்கள் நிறைந்து விளங்கும் கவியமுதக்கடல்களாக விளங்குகின்றன.

ஸ்ரீதேசிகப் பிரபந்தங்களை அநுபவித்து ரஸிக்கவேண்டுமானால் அவற்றை ஆழ்வார்களுடைய திவ்யஸூக்திகளோடு ஒப்பிட்டு ரஸிப்பதுதான் மிகவும் சுவையையுடையதாகும். நாமும் அவ்வாறே சற்று ஸ்ரீதேசிகனுடைய திவ்ய ஸூக்திகளை அநுபவித்துப்பார்ப்போம்.

ஆராய்ச்சிக்கண்ணோடு திவ்யப்பிரபந்தங்களையும் ஸ்ரீதேசிகப்பிரபந்தங்களையும் ஒப்புநோக்கினால் முதன் முதலாக நமது கவனத்தைக் கவரும் விஷயம் இவ்விருவகைப் பிரபந்தங்களுடைய எண்ணிக்கைதான். திவ்யப்ரபந்தங்களைக் கணக்கிடுபவர்கள் அவை மொத்தம் இருபத்துநான்கு என்ற முடிவுக்குதான் வந்திருக்கிறார்கள். முடிவு ஒன்றாக இருப்பினும் கணக்கிடும் வகையில் சில அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன. ஒரு சாரார் பெரியாழ்வார் அருளிச்செய்த திருப்பல்லாண்டையும் அது தவிர்ந்த பெரியாழ்வார் திருமொழியையும் தனித்தனிப் பிரபந்தங்களாகக் கணக்கிடுகிறார்கள். இவர்கள் கணக்குப்படி திவ்யப்பிரபந்தங்களின் ஸங்க்யையில் இராமாநுசநூற்றந்தாதி சேர்வதில்லை. பாசுரங்களின் மொத்த எண்ணிக்கையும் நாலாயிரமாவதில்லை. ஆயினும் நாலாயிரத்தில் குறைந்த சொச்சத் தொகையைக் கருதாது நாலாயிர திவ்யப்பிரபந்தங்கள் என்று வழங்குவதாக இவர்கள் கூறுகிறார்கள். இவ்வாறு கணக்கிடுவது ஸ்ரீதேசிகனுக்குத் திருவுள்ளமில்லை. இவரும் பின்புள்ளார் திவ்யப்பிரபந்தங்களில் கூட்டியும் குறைத்தும் விஷமம் செய்யாதிருக்கும் பொருட்டு அவற்றிலடங்கிய பிரபந்தங்களின் எண்ணிக்கையயும் அவற்றின் பாசுரங்களின் எண்ணிக்கையும் நிஷ்கர்ஷித்துத் தந்துள்ளார். இவருடைய 'ப்ரபந்தஸாரம்' என்னும் பிரபந்தத்தில் திவ்யப்பிரபந்தங்களில் அடங்கிய பிரபந்தங்கள் இவையிவை யென்று வரையறை செய்து, அவற்றின் பாசுரங்களின் எண்ணிக்கையையும் சரியாக நாலாயிரமாகச் சரிக்கட்டுகிறார். ஸ்ரீதேசிகன் திருப்பல்லாண்டு உள்ளிட்ட பெரியாழ்வார் அருளிச்செய்த பதிகங்கள் எல்லாமும் சேர்ந்து பெரியாழ்வார் திருமொழியென்னும் ஒரே பிரபந்தமாக ஆகின்றன என்றும், நாலாயிர திவ்யப்பிரபந்தங்களில் இராமாநுஜநூற்றந்தாதியும் சேர்ந்தது என்றும் திவ்யப் பிரபந்தங்களின் பாசுரங்களைக் கணக்கிட்டால் அவை ஏற்றக்குறைவில்லாமல் சரியாக நாலாயிரமாகின்றன என்றும் திருவுள்ளம் பற்றுகிறார். இவ்வாறு திவ்யப் பிரபந்தங்களைக் கணக்கிட்டவர்களெல்லாரும் அவை மொத்தம் இருபத்து நான்கு பிரபந்தங்கள்தான் என்ற ஒரே முடிவுக்கு வந்து இருக்-

கிறார்கள். இவை இருபத்து நான்கு என்னும் விஷயத்தில் ஒருவருக்கும் அபிப்பிராய பேதமே இல்லை.

இனி ஸ்ரீதேசிகன் அருளிச்செய்த பிரபந்தங்களைக் கணக்கிட்டால் அவைகளும் மொத்தம் இருபத்துநான்கே யாகின்றன. இந்த இருபத்துநான்கு பிரபந்தங்களில் பந்துப்பா, கழற்பா, அம்மானைப்பா, ஊசற்பா, ஏசற்பா என்னும் ஐந்து பிரபந்தங்களும் மறைந்துவிட்டமையால் அவை நமக்குக் கிடைக்கவில்லை. அவை தவிர்ந்த மற்றப் பத்தொன்பது பிரபந்தங்கள் இப்போது அநுஸந்தானத்தில் இருக்கின்றன.

இவ்வாறு ஸ்ரீதேசிகப் பிரபந்தங்களுக்கும் திவ்யப்பிரபந்தங்களுக்குமிடையே ஸங்க்யையில் ஒரு ஒற்றுமை காண்கிறது. இந்த ஒற்றுமையைக் காணும்போது ஆச்சரியம் உண்டாகிறது. இது ஸ்ரீதேசிகன் தமது பிரபந்தங்களை ஆழ்வார்களுடைய அருளிச்செயல்களைப் பின்பற்றி அருளிச்செய்தார் என்பதற்கோர் சான்றாக விளங்குகிறது.

இனி ஸ்ரீதேசிகன் தமது தமிழ்ப் பிரபந்தங்களைக் கையாளும் திறமையைக் காண்போம். ஸ்ரீதேசிகனுடைய பிரபந்தங்களின் சுவையையும் அவர் அவற்றைக் கையாளும் திறமையையும் பல மகான்கள் அனுபவித்துள்ளார்கள். கொண்டாடியுமுள்ளார்கள். அவர்களில் பிரதிவாதிபயங்கரம்அண்ணன் என்னும் மஹானும் ஒருவர். இவர் ஆழ்வார்களின் அருளிச்செயல்களில் ஒன்றாக ஈடுபட்டவர். அவர்களுடைய கவிதைச் சுவையையும் கவிதைத்திறமையையும் நன்றாகஅறிந்தவர். அவர் ஸ்ரீதேசிகனுடைய கவித்திறமையை நன்றாக அனுபவித்துவிட்டு, ஆச்சர்யமடைந்து ஸ்ரீதேசிகன் தமிழ்க்கவிகள் அமைக்கும்விஷயத்தில் பரகாலனுக்கும் பக்திஸாரருக்கும் நிகராக விளங்குகிறார் என்று கொண்டாடியுள்ளார். ஆழ்வார்கள் அனைவருமே தமிழ்க்கவிகளை மிகவும் நன்றாகப்பாடியுள்ளார்கள். அவ்வாறு இருக்கும்போது இந்த மஹான் பரகாலனையும் பக்திஸாரரையும் மாத்திரம் ஏன் எடுக்க வேண்டும்? ஏன் சடகோபரைச் சொல்லவில்லை? இதற்குக்காரணம் சடகோபருடைய கவிதை பரகாலனுடைய கவிதையைக்காட்டிலும் தாழ்ந்தது என்பதன்று. இரண்டு ஆழ்வார்களை எடுத்தது மற்ற ஆழ்வார்களுக்கும் உபலக்ஷணம். பரகாலன் பலவிதமான யாப்புக்களில் பலவிதமான சந்தங்களில் ஏராளமாகப் பாடல்கள் பாடியுள்ளதாலும், அவ்வாறே திருமழிசையாழ்வாரும் எல்லாராலும் போற்றப்படும் வண்ணம் திருச்சந்தவிருத்தம், நான்முகன் திருவந்தாதி முதலிய நூல்களைச் செய்ததனாலும் சிறந்த தமிழ்க்கவிகளிலேயே ஓர் உயர்ந்த ஸ்தானம் பெற்றுள்ளார்கள். திருமங்கையாழ்வாருடைய தனியனில் 'தமிழ்நன்னூல் துறைகள் அஞ்சுக்கிலக்கியம் பரகாலன் பனுவல்களே' என்றும் திருமழிசையாழ்வாருடைய தனியனில் 'உலகும் மழிசையும் உள்ளுணர்ந்து தம்மில் புலவர் புகழ்க்கோலால் தூக்க உலகுதனை வைத்தெடுத்தபக்கத்தும் மாநீர் மழிசையே வைத்தெடுத்த பக்கம் வலிது' என்றும் இவர்களுடைய கவிதைத் திறமையைமிகவுஞ்சிறப்பாகக்கொண்டாடியுள்ளார்கள். இவ்வாறு எல்லாராலும் மிகவும் கொண்டாடப்பட்ட இரண்டு ஆழ்வார்களுடைய கவிதையை எடுத்தது அவர்களையொத்து விளங்கும் மற்ற ஆழ்வார்களுடைய கவிதைக்கும் உபலக்ஷணம். எனவே ஸ்ரீதேசிகனுடைய கவித்திறமை எல்லா ஆழ்வார்களுடைய கவித்திறமைக்கும் நிகராக விளங்குகின்றது என்று ஸ்ரீ ப்ரதிவாதிபயங்கரம் அண்ணன் நிஷ்கர்ஷித்தருளியதாகத் தேறியது.

ஆழ்வார்களுடைய திவ்யப்பிரபந்தங்களில் வேதங்களின் ஸாரதமமான அர்த்தங்களெல்லாம் பொதிந்து கிடக்கின்றன என்பது மிகவும் ப்ரஸித்தமான விஷயம். 'வேதம் தமிழ் செய்த மாறன்' என்றும், 'எய்தற்கரிய மறைகளையாயிரம் இன்தமிழால் செய்தற்குலகில் வரும் சடகோபன்' என்றும் 'உண்மை மிகு மாறன் மறை யாயிரத்தோடு' என்றும் பெரியோர்கள் அநுஸந்தித்து நம்மாழ்வாருடைய பிரபந்தங்கள் எல்லாம் வேதங்களின் ஸாரமான அர்த்தங்களே என்று நிஷ்கர்ஷம் செய்துள்ளார்கள். அவ்வாறே 'மங்கையர் கோனீந்தமறையாயிரம்' என்று திருமங்கையாழ்வாருடைய ப்ரபந்தங்களும், 'வேதச் செழும்பொருள் நான்முகன் தொண்ணூற்றாறு பாட்டும்' என்று திருமழிசையாழ்வார் ப்ரபந்தமும் 'சீரிய நான்மறைச் செம்பொருள் செந்தமிழாலளித்த பாரியலும் புகழ்ப் பாண்பெருமாள்' என்றும், 'பலமறையின் பொருளாய்ப் பாண்

பெருமாளே நீ முன் பாதாதிகேசமதாய்ப் பாடித்தந்த சொல்லமலனாதிபிரான்' என்றும் திருப்பாணாழ்வாருடைய திவ்யஸூக்திகளும் வேதங்களின் செழும்பொருளாக விளங்கினமையைத் தெளிவித்துள்ளார்கள். 'வேதமனைத்துக்கும் வித்தாகும் கோதைதமிழ்' என்று ஸ்ரீ ஆண்டாளுடைய திருப்பாவையை உபநிஷத்ஸாரமாகக் கூறினார்கள். உபய வேதங்களையும் ஐயந்திரிபறக் கற்று, வேதாந்தங்களை நன்றாகப் பிரவசனம் செய்து பெரிய பெருமாளால் வேதாந்தாசாரியர் என்று பிருது அளிக்கப்பெற்ற ஸ்ரீமத்வேதாந்ததேசிகன் எம்பெருமானே பராங்குசபரகாலாதிரூபத்தாலே அபிநவமாகவொரு தசாவதாரம் பண்ணியருளினான் என்றும் அவ்வாறு அவதரித்து எல்லாரும் அதிகரிக்கக்கூடாத வேதங்களின் ஸாரதமமான அர்த்தங்களை எல்லோருமதிகரிக்கக் கூடியபாஷையால்ஸங்க்ரஹித்துத்தந்தருளினானென்றும் இது மேகங்கள் உப்பு நிறைந்த ஸமுத்ரஜலத்தை வாங்கி அதை ஸர்வருக்கும் உபஜீவ்யமான தண்ணீராகப் பொழிவது போன்று விளங்குகிறதென்றும் அருளிச்செய்கிறார். இவ்வாறு திவ்யப்ரபந்தங்களெல்லாம் வேதமயமாக விளங்குவது தெரியது. இவற்றைப் போலவே ஸ்ரீதேசகனுடைய ப்ரபந்தங்களும் வேதவேதாந்தங்களின் ஸாரமான நுண்பொருள்களைத் தம்மில் பொதிந்துகொண்டு விளங்குகின்றன.

ஸ்ரீதேசிகன் தமது ப்ரபந்தங்களையும் மற்ற நூல்களையும் அருளிச்செய்யுமுன்பு நிகழ்ந்த ஸம்பவம் அனைவரும் அறிந்ததே. பால்யத்திலேயே ஸ்ரீதேசிகன் தாம் அறியவேண்டிய சாமாந்ய சாஸ்த்ரங்களையும் வேதாந்த சாஸ்த்ரங்களையும் நன்றாகக் கற்றறிந்த பின்பு திருவஹீந்திரபுரத்திற்கு எழுந்தருளி அங்கு தமக்கு ஏற்கனவே உபதேசிக்கப்பட்டிருந்த வைநதேய மந்திரத்தை ஆவ்ருத்தி செய்தார். அதனால் ப்ரீதியடைந்த திருவடிநயினார் அவருக்கு ப்ரத்யக்ஷமாகி, அவருக்கு ஹயக்ரீவமந்திரத்தை உபதேசம் செய்து ஹயக்ரீவமூர்த்தியையும் கொடுத்தருளினார். இவ்வாறு அவர் தாம் பெற்ற ஹயக்ரீவ மந்திரத்தை வெகு நாளாவ்ருத்தி செய்த பின்பு அவருக்கு ஸ்ரீஹயக்ரீவருடைய அருள் உண்டாயிற்று. வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் அவர் முன்பு தோன்றி அவருக்கு அநுக்ரஹித்தவுடன் ஸ்ரீதேசிகன் ஸகலவித்யாபாரங்கதரானார். அவர் திருவஹீந்திரபுரத்திற்கு ஸ்ரீஹயக்ரீவருடைய அநுக்ரஹத்தை முன்னிட்டு வந்தவராகையால் தாம் வந்த காரியம் கைகூடியவுடன் தமது ஜந்மபூமியாகிய காஞ்சீபுரத்திற்கு எழுந்தருளினார். ஆனால் அவரைக் கொண்டு தம் விஷயமாகப் பலவிதமான ப்ரபந்தங்களைப் பண்ணிக்கொள்ளப் பார்த்துக்கொண்டிருந்த ஸ்ரீதேவநாதப் பெருமாள் அவரை விடுவாரே? தமது மார்க்கத்தின் நடுவில் ஸ்ரீதேசிகன் பெண்ணையாற்றங்கரையில் ஓரிரவு தங்கி சயனித்துக்கொண்டிருந்தபொழுது ஸ்ரீதேவநாதன் அவருடைய ஸ்வப்னத்தில் தோன்றி, அவரை நோக்கி, 'தூப்புல்பிள்ளாய்! நன்று! வெகுநன்று! நாம் உமக்கு இவ்வளவு தூரம் விசேஷ கடாக்ஷம்செய்தது, உமக்கு சொல்லார்தமிழொருமூன்றும்சுருதிகள்நான்கும் எல்லையில்லா அறநெறியாவுமறிவித்தநுக்ரஹம் செய்து ஸகலவித்யாபாரங்கதராகச் செய்ததுஎல்லாம் எதற்காக என்று நீர் இருந்தீர்? நீர் நம் விஷயமாக வேதாந்தங்களின் அர்த்தங்களைப் பிரதிபாதிக்கும்படியான ஸ்தோத்ரங்களையும் பிரபந்தங்களையும் செய்யவேண்டாவோ? இன்னும் இந்த நம் விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயத்தைப் பலபடிகளாலும் நீர் தழைக்கப் பரவச் செய்யவேண்டாவோ? திருவஹீந்திரபுரத்திற்குத் திரும்பி வாரும்' என்று கூறியருளினார். ஸ்ரீதேசிகன் விரும்பியதும் இவ்வளவேதான். இதுவரையில் அவர் ஸகலவித்யாபாரங்கதராக மாத்திரம் இருந்தார். ஆனால் இந்த க்ரந்தங்கள் ஒன்றும் செய்யவில்லை. இவ்வாறு க்ரந்தங்களைச் செய்வதற்கு பகவத்பாகவத ஆசார்யர்களுடைய நியமனங்களிலேதாவது ஒன்றை அவர் எதிர்பார்த்திருந்தார். அவர் விரும்பிய வண்ணம் ஸ்ரீதேவநாதனுடைய நியமனம் இப்போது ஏற்பட்டுவிட்டது. இனிமேல் சும்மா இருக்கலாமோ? சும்மாத்தான் இருப்பாரோ? எம்பெருமானுடைய நியமனத்தைத் தலைக்கட்டும் த்வரை அவருக்குண்டாகியது. உடனே திருவஹீந்திரபுரத்திற்கெழுந்தருளினார். அங்கு எம்பெருமானைத் திருவடி தொழுது அவருடைய திவ்ய நியமனப்படியே கிரந்தங்களை இயற்றியருளினார். இவ்வாறு ஸ்ரீதேவநாதன் தம்மிடத்தில் செய்தருளிய அநுக்ரஹ விசேஷத்தைத் தம்முடைய முதல் க்ரந்தமான 'ஸ்ரீதேவநாயகபஞ்சாசத்' என்னும் ஸ்தோத்ரத்தின் தொடக்கத்திலேயே அழகாக அருளிச் செய்துள்ளார்.

'ஸம்ரக்ஷணீயமமராதிபதே த்வயைவ தூரம் ப்ரயாதமபி துஸ்த்யஜகாடபந்தம்। ஆக்ருஷ்டவாநஸி பவாநநுகம்பமாந: ஸூத்ராநுபந்த ஶகுநிக்ரமத: ஸ்வயம் மாம்॥' என்னும் அழகான ச்லோகம் ஸ்ரீதேவநாயகபஞ்சாசத் ஸ்தோத்ரத்தின் ஆரம்பத்திலேயே விளங்குகிறது. இதன் பொருள் 'ஸ்ரீதேவாதிநாதனே! ஒரு பக்ஷி வெகு தூரம் பறந்து சென்றாலும் அதன் காலில் விட்டுப்போகாதபடி கெட்டியாகக் கட்டிய கயிற்றினால் அதைப் பிடித்திழுத்து அருகில் கொண்டுவருவதைப்போல் தேவரீரை விட்டு அடியேன் வெகுதூரம் போனாலுங்கூட அடியேன் மேலுள்ள பரிபூர்ணமான கருணையினால் தேவரீர் ஸ்வயமாக அடியேனை தேவரீருடைய திருவடிவாரத்திற்கு இழுத்து வந்தாயிற்று. ஆகையால் தேவரீர் தான் அடியேனை ரக்ஷித்தருள வேண்டும்' என்பது.

இது தேவநாதனுடைய நியமனத்தைத் தலைக்கட்டுவதற்குத் தாம் செய்தருளும் முயற்சியில் தமக்கு உதவி புரிந்த பகவத்ஸங்கல்பத்தை நிறைவேற்றி வைக்குமாறு எம்பெருமானிடம் செய்தருளும் ப்ரார்த்தனை. ப்ரார்த்தனையைத் தலைக்கட்டி வைத்தான் எம்பெருமான் என்று சொல்லவும் வேண்டுமோ? 'கௌந்தேய! ப்ரதிஜாநீஹி ந மே பக்த: ப்ரணச்யதி' என்றவனன்றோ அவன்.

இவ்வாறு தேவநாதனுடைய நியமனத்தைத் தலைக்கட்டும் வண்ணம் ஸ்ரீதேசிகன் ஸம்ஸ்க்ருதத்தில் 'ஸ்ரீதேவநாயகபஞ்சாசத்' என்னும் ஸ்தோத்ரத்தையும் ப்ராக்ருத பாஷையில் 'அச்சுதசதகம்' என்னும் ஸ்தோத்ரத்தையும் செந்தமிழில் மும்மணிக்கோவை, பந்துப்பா, கழற்பா, அம்மானைப்பா, ஊசற்பா, ஏசற்பா, நவரத்னமாலை என்னும் ப்ரபந்தங்களையும் செய்தருளினர். செய்து முடிவில் ஸ்ரீ நவரத்னமாலையின் கடைசிப் பாசுரத்தில்,

'அந்தமில்சீ ரயிந்தைநக ரமர்ந்த நாதன்
அடியிணைமே லடியுரையா லைம்ப தேத்திச்
சிந்தைகவர் பிராகிருதம் நூறு கூறிச்
செந்தமிழ் மும் மணிக்கோவை செறியச் சேர்த்துப்
பந்துகழ லம்மானை யூச லேசல்
பரவுநவமணிமாலையிவையும்சொன்னேன்
முந்தைமறை மொய்யவழி மொழிநீ யென்று
முகுந்தனருள் தந்தபயன் பெற்றேன் நானே

என்று தலைக்கட்டுகிறார்.

இந்த நிகமனப்பாசுரத்திலிருந்து ஸ்ரீதேசிகனால் ஸ்ரீதேவநாதன் விஷயமாக அருளிச்செய்யப்பட்ட இந்த ப்ரபந்தங்களெல்லாம் ஸ்ரீதேவநாதனுடைய நியமனமாகிற அனுக்ரஹம் காரணமாக அவதரித்தவையென்றும் இவைகளெல்லாம் தொல்லைப் பழமறையில் ஓதப்படும் அர்த்தங்களின் ஸாரங்களேயென்றும் தெளிவாகின்றது. எனவே ஆழ்வார்களுடைய ஸ்ரீஸூக்திகளைப் போலவே ஸ்ரீதேசிகனுடைய ப்ரபந்தங்களும் வேதாந்தங்களின் அர்த்தங்களையே விளக்குகின்றன என்று தேறியது. இவ்வளவால் ஆழ்வார்களுடைய ஸ்ரீஸூக்திகளுக்கும் ஸ்ரீதேசிகனுடைய ப்ரபந்தங்களுக்கும் தோன்றுகிற ஒற்றுமையின் மிகுதியைக் கூறி இனி இன்னும் சற்று மேலே போவோம். வேதங்கள் ஸம்ஸ்க்ருத வேதமாகவும் தமிழ் வேதமாகவும் விளங்குகின்றன. அதைப் போலவே ஸ்ரீதேவநாதன் விஷயமான இந்த ஸ்துதிகளும் ஸம்ஸ்க்ருத ப்ராக்ருதங்களாகிற வடமொழி ஸ்துதிகளாகவும் செந்தமிழ் ப்ரபந்தங்களாகவும் விளங்குகின்றன. எனவே தேவநாயகபஞ்சாசத் முதலிய வடமொழி ஸ்துதிகள் ஸம்ஸ்க்ருத வேதத்தை ப்ரதிபாதிப்பன என்றும் மும்மணிக்கோவை முதல் நவரத்தினமாலையீறாக உள்ள ப்ரபந்தங்கள் தமிழ் வேதமென்று கொண்டாடப்படும் நம்மாழ்வாருடைய ஸ்ரீஸூக்திகளை ப்ரதிபாதிப்பனவென்றும்கொள்வதில் தவறில்லை. ஸம்ஸ்க்ருத தமிழ் வேதங்களிரண்டும் பகவத்ஸ்வரூப குணவிபூதிகளையும் தத்ஹித புருஷார்த்தங்களையுந்தான் ப்ரதிபாதிக்கின்றன என்பதில் ஸந்தேஹமில்லை. ஆயினும் பாசுரங்களின் யாப்புகள் ரஸங்கள் அலங்காரங்கள் முதலியவற்றை நாம் அனுபவிக்கப் போவதால் ஆழ்வாருடைய ப்ரபந்தங்களுக்கும் ஸ்ரீதேசிகனுடைய ப்ரபந்தங்களுக்கும் தோன்றும் ஒப்புமைகளைக் கண்டு மேற்கண்டவாறு கூறியது.

நம்மாழ்வாருடைய திருவிருத்தம் முதலிய நான்கு ப்ரபந்தங்களோடு ஸ்ரீதேசிகனுடைய முதல் ப்ரபந்தங்களான மும்மணிக்கோவையையும் நவரத்தினமாலையையும் ஒப்புநோக்கினால் யாப்பின் அமைதியாலும், அர்த்தங்களின் ஸாத்ருச்யங்களாலும், ரஸங்களின் நிறைவினாலும், அலங்காரங்களாலும் காவ்யகுணங்களினாலும், த்வனியினாலும் இவ்விருவகை ப்ரபந்தங்களிடையே ஒற்றுமை மிகுதியாக விளங்குகின்றமையைக் காணலாம்.

ஆழ்வார்களுள் ப்ரதானமானவர் நம்மாழ்வார். ஆழ்வார்களில் நம்மாழ்வாரை அவயவியாகவும், மற்ற ஆழ்வார்களை அவருடைய அவயவங்களாகவும் கூறுவதுண்டு. நமது விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயத்தின் அர்த்தங்கள் அவ்வளவும் நம்மாழ்வாருடைய ப்ரபந்தங்களில் மிகவுமழகாக உபபாதிக்கப்படுகின்றன. அவைகளுக்கு அநேகம் வியாச்யானங்கள் ஏற்பட்டுள்ளன. இன்னும் ஏற்பட்டுக்கொண்டுமிருக்கின்றன. ஆலோசித்துப் பார்க்கப் பார்க்கப் புதிது புதிதாக அர்த்தங்கள் தோன்றுகின்றன. ஆகையினால்தான் ஸம்பிரதாயத்தில் அவருடைய ப்ரபந்தங்களுக்கு மிகவும் ஏற்றம் உண்டாகியிருக்கின்றது. எனவே ஸ்ரீதேசிகனுக்கு நம்மாழ்வாரிடம் மிகவும் ஈடுபாடு உண்டாகி அவர் தமது கன்னித்தமிழ் ப்ரபந்தங்களை யாப்பினாலும் அர்த்தங்களினாலும் நம்மாழ்வாருடைய பிரபந்தங்களை அடியொற்றிச் செய்ததில் வியப்பில்லை.

ஸ்ரீதேசிகனுடைய மும்மணிக்கோவை நவரத்னமாலைகளுக்கும் ஸ்ரீ ஆழ்வாருடைய திருவிருத்தம் முதலிய நான்கு ப்ரபந்தங்களுக்குமுள்ள யாப்பினுடைய ஸாத்ருச்யங்களை முதலில் பார்ப்போம். நம்மாழ்வாருடைய முதல் மூன்று ப்ரபந்தங்களான திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி என்னும் மூன்று ப்ரபந்தங்களும் முறையே கட்டளைக் கலித்துறை, ஆசிரியப்பா, வெண்பா என்னும் பாக்களினாலானவை. இதே மூன்று விதமான பாக்களும் விரவி வரும் தமிழ்ப் பிரபந்தம் மும்மணிக்கோவை யென்பது. மும்மணிக்கோவைக்கு இலக்கணம் சொல்லுகிறவர்கள் 'ஈண்டிய முப்பதாய், ஈரெண் கலைவண்ணம் மூண்ட தொலி யந்தாதி முப்பதாம்–ஆண்டகவல் முன் முறையே வெண்பா கலித்துறை யந்தாதி மும்மணிக்கோவைக்கு முதல்' என்றார்கள். அதாவது மும்மணிக்கோவையில் முப்பது பாசுரங்கள் இருக்கவேண்டும். அவைகள் அந்தாதியாக அமைந்திருக்க வேண்டும். முதல் பாசுரம் அகவலாகவும், அடுத்தது வெண்பாவாகவும், அடுத்தது கட்டளைக் கலித்துறையாகவும் வந்து இந்த வரிசையிலேயே பாக்கள் அமைந்திருக்க வேண்டும். இந்த இலக்கணப்படியே ஸ்ரீதேசிகன் இந்த மூன்றுவித யாப்புக்களிலமைந்த பாசுரங்களைத் தமது மும்மணிக்கோவையில் அமைத்தருளியிருக்கிறார். இந்தப் பாசுரங்கள் அந்தாதியாகவும் இருக்கின்றன. ஆனால் பாசுரங்கள் முப்பதில்லை. பத்துப் பாசுரங்கள் தான் நமக்குக் கிடைத்திருக்கின்றன. எனவே மற்ற இருபது பாசுரங்களும் லுப்தமாகிவிட்டன என்று கூறுகிறார்கள்.

இனி நம்மாழ்வாருடைய கடைசிப் பிரபந்தம் திருவாய்மொழியாகும். அது விருத்தங்களால் அருளிச்செய்யப்பட்டுள்ளது. இதைத் திருவுள்ளம் பற்றித்தான் ஸ்ரீதேசிகன் தமது நவரத்தினமாலையை விருத்தப் பாக்களினால் அமைத்தருளியுள்ளார் என்று தோன்றுகிறது. இப்போது மறைந்துவிட்ட பந்துப்பா, கழற்பா, அம்மானைப்பா, ஊசற்பா, ஏசற்பா, என்பவைகளும் விருத்தப் பாக்களாலேயே தான் ஆகியிருக்கவேண்டும் என்று எண்ண இடமிருக்கின்றது.

இவ்வாறு யாப்புக்களின் பொருத்தங்களினால் ஸ்ரீதேசிகனுடைய மும்மணிக்கோவை, நவரத்தினமாலைகளுக்கும் நம்மாழ்வார் பிரபந்தங்களுக்கும் ஒற்றுமை காண்கின்றது. இனி இந்தப் பிரபந்தங்களின் அர்த்தங்களை அநுஸந்திக்கும்போது தோன்றும் ஸாத்ருச்யங்கள் நம்மை ஆச்சர்யத்தில் ஆழ்த்துகின்றன.

ஸ்ரீ:

"திறலனுமன் தெரிந்துரைத்த அடையாளம்"

[விசேஷ உரை] மந்தரை என்னும் கூனி கைகேயியை நோக்கி, 'அட கைகேயீ! இராமனை நீ நல்லவனென்று நினைத்திருக்கிறாய்; அவனுக்கு அரசாட்சி வந்தபிறகு அவன் மனம் மாறும். நிச்சயம். கோசலை பார்த்துக்கொடுத்த அற்பப் பொருளைக்கொண்டே நீயும் உன் பிள்ளையும் இனிப் பிழைக்கவேண்டிவரும். உன்னை வந்து ஒருவன் இரந்தால் அவனுக்குக் கொடுப்பதற்கென ஒரு பொருள் உன்னிடமுண்டோ? உன் பந்துக்களில் ஒருவர் தளர்ந்து உன்னிடம் வந்தால் அவரைக் காப்பாற்ற உனக்கு வகை உண்டா? தசரதன் தாக்ஷிண்யத்துக்குக் கட்டுப்பட்டு, ஜனகமஹாராஜன் உன் தந்தையாகிய கேகயராஜன் மீது படையெடாதிருக்கின்றான். இப்போது ராமன் பட்டத்துக்கு வந்துவிட்டால், உடனே அவன் உன் தந்தையின் ராஜ்யத்தைக் கைப்பற்றுவான். அப்புறம் கேகயனுக்கு வாழ்வில்லை. உன் தந்தைக்கு இக்கோஸலநாட்டார் துணையாவரென்று ஒருகாலும் நம்பாதே. ஒன்று கேள், இராமனுக்கு வந்தராஜ்யம் அவனை விட்டுப் பிரியாத லக்ஷ்மணனுக்கும், அவ்விராமன் காலத்திற்குப் பின் அவன் ஸந்ததியார்க்கும் அனுபவிக்க உரியதாகுமேயன்றி, பரதனுக்கு வருமென்று கனவிலும் நினையாதே. இராமன் ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருக்க, அவன் காலடியில் உன் மகன் பரதன் கைகட்டி நிற்கவேணுமே. இந்தக் கதி அவனுக்கு வருவதைக் காட்டிலும் தவம் செய்யுமாறு அவனைக் காட்டிற்கு அனுப்புவது மேல். இல்லையேலவன் சாவது நலம். இராமனுக்குப் பட்டம் கட்டுவதற்குப் பரதன் தடையாகவிருப்பானென்று கருதியன்றோ அக்கிழவனவனை கேகயநாட்டிற்கனுப்பினான். இதிலிருந்து நீ எல்லாவற்றையும் அறிந்துகொள்ளலாமே! உனக்கு உணர்ச்சியில்லையா?' என்று திருப்பாற்கடலை மந்தரமலை கலக்கினாற்போலக் கலக்கினாள்.

அதனால் மனம் கலங்கப்பட்ட கைகேயி, கூனியின் துர்போதனையினால் தசரதரை, இராமன் 14- வருஷம் வனவாஸம் செய்யவும், பரதன் நாடாளவும் வரங்கேட்க, மன்னவன் ராமவிரஹத்தால் மூர்ச்சித்து வெறுமனே கிடக்க, கைகேயி அதுவே காரணமாக ஸுமந்த்ரனைக்கொண்டு ராமனை வரவழைத்து அப்பா ராமா! பரதன் அரசு புரிய நீ தவக்கோலத்துடன் 14- வருஷம் வனவாஸம் செய்யவேணுமென்பது அரசர் கட்டளை' என்று சொல்ல, ராமன் 'தாயே! அரசர் கட்டளையிடவேண்டுமென்பதில்லை. உமது பணியே எனக்குப் போதும். மேலும் என் தம்பிக்கு ராஜ்யம் கிடைப்பின் அது நான் அரசு பெற்றது போலவேயாகுமாதலால், ராஜ்யமில்லையே என்ற குறையுமெனக்கில்லை. இப்படி எனக்கும் என் தம்பிக்கும் ஓர் உயர்ந்த நன்மை நிகழுமாயின், இதைவிட மேன்மை எனக்கு வேறில்லை. இதோ கானகஞ் செல்கின்றேன்' என்று லக்ஷ்மணனுடன் புறப்பட்டான் ராமன் என்பதை ஓர் அடையாளமாகக் கூறுகின்றான் அனுமன்.

இப்பாசுரத்தில் 'இலக்குமணன் தன்னொடும்' என்றது ஸீதையாகிய 'உம்மோடும்' என்பதற்கு உபலக்ஷணம்.

4. வாரணிந்த முலைமடவாய்!
வைதேவீ! விண்ணப்பம்
தேரணிந்த அயோத்தியர்கோன்
பெருந்தேவீ! கேட்டருளாய்
கூரணிந்த வேல்வலவன்
குஹனோடுங் கங்கைதன்னில்
சீரணிந்த தோழமை
கொண்டதுமோர் அடையாளம்.

[பொழிப்புரை] கச்சையணிந்த முலையையுடைய மடப்பத்தையுடையவளே! விதேஹ வம்சத்திற் பிறந்தவளே! ஒரு விஜ்ஞாபனம்:- அயோத்திக்கு அரசனாவதற்குரிய ஸ்ரீராமபிரானது பெருமைக்குத் தகுந்த தேவியே! (அவ் விண்ணப்பத்தைக்) கேட்டருளவேணும். கூர்மையான வேலாயுதத்தில் வல்லவனான குஹப்பெருமாளோடுகூடக் கங்கைக் கரையில் ராமன்

சிறந்த ஸ்நேஹத்தைக் கொண்டதும் ஓரடையாளம்

[வி-உரை] கங்கைக்கரையில் ஸ்ரீராமபிரான் குஹனோடு நட்புக் கொண்டதை ஓர் அடையாளமாகக் கூறுகின்றான் அனுமான். [ஸ்ரீராமன் கங்கைக் கரையில் குஹனோடும், பம்பைக் கரையில் ஸுக்ரீவனோடும், கடற்கரையில் ஸ்ரீவிபீஷணாழ்வானோடும் நட்புக்கொண்டு கடற்கரையில் வீடணனை நோக்கி, 'குஹனோடும் ஐவரானோம், ஸூர்யபுத்ரனான ஸுக்ரீவனுடன் அறுவரானோம்; என் அன்பிற்குரிய வீடண! நின்னுடன் எழுவரானோம்' என்று அருளியது அறியத்தக்கது.]

குஹன் என்பவன் கங்கையில் ஓடம் விடுபவன்; ஆயிரம் ஓடத்திற்குத் தலைவன்; கங்கைக் கரையிலுள்ள சிருங்கிபேரபுரத்திற்கதிபதியுமான ஒரு வேடர் தலைவன். இராமபிரான் தம்பியான லக்ஷ்மணனோடும் மனைவியாகிய ஸீதாதேவியுடனும் தாய் சொற்கொண்டு தண்டகாவனம் எழுந்தருள்வதற்கு அயோத்யாபுரியை நீங்கிக் கங்கைத்துறை சேர்கையில், குஹன் ராமனைக் காணும்பொருட்டுப் பல காணிக்கைப் பொருள்களுடன் அருகில் வந்து சேர்ந்து வணங்கி நிற்க, ஸ்ரீராமன் அவனை நண்பனாகக் கொண்டு, மிக்க அன்புடன் அவன் கொணர்ந்த காணிக்கைகளையும் உகந்து, இன்று நீ உனதூர் சென்று நாளை உதயத்தில் கங்கை கடத்தற்கு ஓடம் கொண்டுவா' என்று நியமிக்க. அன்பிற் சிறந்த குஹன் ராமனை விட்டுப் பிரியமாட்டாதவனாய் 'இங்கே இருந்து தேவரீர்க்கு என்னால் இயன்ற அடிமை செய்வேன்' என்று வேண்ட, இராமன் அதற்கிணங்கி, 'இனிய நண்ப! நம்முடன் இரு' என்றனுமதி செய்ய, குஹன் தன் சேனைகளுடன் ராமனைச் சூழ்ந்து வில்லுங்கையுமாகப் பாதுகாவல் செய்து நின்றான். மறுநாள் உதயத்தில் ஸ்ரீராமன் குஹனை ஓடம் கொண்டுவரச் சொன்னபோது, குஹன் ராமன் அடியில் விழுந்து வணங்கி, 'நாங்கள் துணை செய்ய, நீங்கள் இவ்விடத்திலேயே வஸித்தருளவேண்டும்' என்று ப்ரார்த்திக்க, அதற்கு ராமன் ஸம்மதிக்காமல், 'புண்யநதிகளில் ஸ்நானமும் மஹர்ஷிகளின் ஸேவையும் செய்துகொண்டு மீண்டு வருவேன்' என்று சொல்லி, பிறகு, குஹன் கொணர்ந்த ஓடத்திலேறிக் கங்கை கடந்து அப்பால் செல்லத்தொடங்குகையில், குஹன் மிக்க பரிவுடன், 'அடியேனும் பணிவிடைகள் செய்துகொண்டு உடன் வருகிறேன்' என்று விண்ணப்பம் செய்ய, ராமபிரான் அதற்கு இணங்காமல், 'அப்பா! என் மனைவியான இந்த ஸீதை உன் தோழி; என் தம்பியான இந்த லக்ஷ்மணன் உன் தம்பி; நீ எனது உயிர்த் தோழன்; இதுவரை நாங்கள் உடன் பிறந்தவர்கள் நால்வராயிருந்தோம்; இப்பொழுது உன்னுடனைந்துபேராயினோம்; உன் சுற்றத்தார் என் சுற்றத்தார்; அவர்கள் உன்னைப் பிரிந்து வருந்தலாகாது; ஆதலால் நீ இங்கேயே இருந்து அவர்களைப் பாதுகாக்கக் கடவாய்; அன்றியும் அயோத்யாபுரி கெடாமைக்காக அங்குப் பரதனை வைத்தோம்; இவ்விடங்கெடாதபடி நீ இங்கே நில்; நான் மீண்டு வடக்கு நோக்கி வரும்போது உன்னிடம் வருவேன்' என்று சொல்லிக் குஹனை வலுவில் நிறுத்திப் பிராட்டியும் இளையபெருமாளும் தானுமாகச் சித்ரகூடபர்வதத்தை நோக்கிச் சென்றனரென்ற வரலாற்றை அனுமானடையாளமாகக் கூறுகின்றான்.

5. மானமரும் மென்னோக்கி
வைதேவீ! விண்ணப்பம்
கானமரும் கல்லதர்போய்க்
காடுறைந்த காலத்து
தேனமரும் பொழில் சாரல்
சித்திரகூ டத்திருப்ப
பால்மொழியாய்! பரதநம்பி
பணிந்ததுமோர் அடையாளம்

[பொ-உரை] மான்போன்ற மென்மையான கண்களையுடைய வைதேஹியே! அடியேன் விண்ணப்பம் செய்வதைக் கேட்டருளவேணும்:- காட்டில் பருக்கைக்கற்கள் நிறைந்த வழியூடே சென்று காடுகளில் வஸித்தபோது வண்டுகள் நிறைந்த சோலையையுடைய தாழ்வரையோடு கூடிய சித்ரகூடபர்வதத்தில் நீங்கள் இருக்கையில், பால்போலும் இனிய பேச்சை

யுடையவளே! பரதாழ்வான் வந்து வணங்கியதும் ஓர் அடையாளமாம்.

[வி-உரை] பரதாழ்வான் தசரதசக்ரவர்த்திக்குச் செய்யவேண்டிய அந்திம க்ரியைகளைச் செய்த பின்பு, நாட்டாரும் நகரத்தாரும் வஸிஷ்டர் முதலிய புரோஹிதர்களுமாக எல்லோரும் திரண்டு, 'பெருமாள் காட்டுக்குச் சென்றார்; சக்ரவர்த்தியோ இறந்தார்; நாடு அராஜகமாகப் போகக் கூடாது; சக்கரவர்த்தியின் அநுமதியிருப்பதாலும்: இராமபிரானும் பரதனுக்கு முடிசூடுவதற்கிசைந்து காட்டிற்குச் சென்றதினாலும், பரதனுக்கே முடி சூட்டுவோம்' என்று நிச்சயித்து மங்களகரமான வாத்யங்களை முழக்கிக்கொண்டிருக்க, அந்த த்வனி செவிப்பட்டவுடனே பரதாழ்வான் ஸபையினிடம் வந்து, 'எனது அடிமைத் தன்மையைக் கவரவா இக்கூட்டம் போட்டீர்கள்? என்று கதறிக்கொண்டே வஸிஷ்டபகவானைப் பார்த்து 'நீர் எங்கள் குடிக்கு ஹிதம் சொல்வது அழகாய்த்தானிருக்கிறது! நானும் ராஜ்யமும் ராமனுடைய வுடைமை. ஒருவனுக்கு இரண்டு வஸ்துக்கள் உடைமையாயிருந்தால் ஒன்றை மற்றொன்று ஆளுமோ? நாடு அராஜகமாகப் போகக்கூடாதென்ற ஒன்றைப் பார்ப்பீரானால் ராஜ்யம்தான் என்னை ஆளட்டுமே. ராமனது ராஜ்யத்திற்கு ஆசைப்பட்டேனானால் ராமவிரஹத்தால் உயிரிழந்த தசரதருக்குப் புத்ரனாவேனா நான்? கடைசியாக நான் சொல்வதைக் கேளுங்கள். நாம் எல்லோரும் போய்ப் பெருமாள் திருவடிகளில் விழுந்து 'மணிமுடி தவிர்ந்து சடைமுடி தரித்த தேவரீர் இப்போது காட்டைவிட்டு நாட்டிற்கெழுந்தருளித் திருமுடி சூடவேணும். அடியேன் தேவரீருக்குப் பங்காளியல்ல; சிஷ்யன்; தாஸன்; என் மீது அநுக்ரஹஞ்செய்யவேண்டு'மென்று வேண்டுவோம், புறப்படுங்கள்' என்று சொல்ல, வஸிஷ்டர் முதலானோரோடும் தாய்மார்களோடும் சேனைகள் புடைசூழப் பரதாழ்வான் ஸ்ரீராமபிரான் எழுந்தருளியிருக்கும் சித்ரகூட மலைச்சாரலையடைந்து, அயோத்திக்கு அப்போதே மீண்டுவரும்படி ஸ்ரீராமபிரான் திருவடிகளில் விழுந்து வணங்கித் தலையால் இரந்ததுவும் ஓர் அடையாளம் என்கிறான் அநுமான்.

6 சித்திரகூ டத்திருப்பச்
சிறுகாக்கை முலைதீண்ட
அத்திரமே கோண்டேறிய
அனைத்துலகும் திரிந்தோடி
வித்தகனே! இராமாவோ!
நின்னபய மென்றழைப்ப
அத்திரமே யதன் கண்ணை
யறுத்ததுமோர் அடையாளம்

[பொ-உரை] சித்திரகூடமலையிலே நீங்கள் இருவரும் ரஸாநுபவம் பண்ணிக்கொண்டிருக்கையில், சிறிய காக்கையின் வடிவுகொண்டுவந்த ஜயந்தன் உமது திருமுலைத்தடத்தைத் தீண்ட அதனால் கோபம் கொண்ட ஸ்ரீராமபிரான் ப்ரஹ்மாஸ்த்ரத்தைத் தொடுத்து ப்ரயோகிக்க அக்காகம் அந்த அஸ்த்ரத்தினின்று தான் தப்பித்துக்கொள்வதற்கு உலகமெல்லாம் திரிந்தோட, தான் தப்பமுடியாமையால் மீண்டும் ராமபிரானையே அடைந்து, 'ஆச்சர்யமான குணங்களையுடையவனே! ராமனே! நான் உன் அடைக்கலம்' என்று கூப்பிட, பிராணனை யபஹரிக்கவேணுமென்று விட்ட அந்த அஸ்த்திரமே அந்தக் காகத்தின் ஒரு கண்ணை மாத்திரம் அறுத்துவிட்டதும் ஓர் அடையாளமாகும்.

[வி-உரை] இந்தக் காகாஸுரவ்ருத்தாந்தம் மிக்க ஏகாந்தத்தில் இருவருமான சேர்த்தியிலே லக்ஷ்மணனுக்கும் தெரியாத வரலாறாதலால் இதை முக்யமானதோர் அடையாளமாகக்கொண்டு கூறுகின்றான் அநுமான்.

சித்ரகூடமென்பது, சோலைகளும் ஆறுகளும் அருவிகளும் கல்வட்டங்களும் நிறைந்து விசித்ரமான சிகரங்களையுடைய ஒரு மலை ப்ரதேசம்.

தாயே! இந்த மலைச்சாரலிலே தேவரீரும் பெருமாளுமாக ஏகாந்தரஸம் அநுபவித்து ஒருவர்க்கொருவர் மாறி மாறிக் கண்வளர்ந்து மிக்க ஸுகாநுபவத்திலிருந்தீர்கள்.

(தொடரும்)

தேவரீர் மடியில் பெருமாள் பள்ளிகொண்டிருக்கும்போது, இந்திரன் புத்ரனான ஜயந்தன் தமோகுணத்தாலே விவேகசூன்யனாய், தேவ வேஷத்தை மறைத்துக் சாகவேஷத்தைப் பூண்டுகொண்டுவந்து தாயென்று அறியாதே தேவரீர் திருமுலைத் தடத்திலே குத்த, அவ்வளவிலே பெருமாள் உணர்ந்தருளி, அதிகோபிஷ்டராய், ஒரு தர்ப்பத்தையெடுத்து அதில் ப்ரஹ்மாஸ்த்ரத்தை யோஜித்து அதனை அந்தக் காகத்தின் மேலே செலுத்திவிட, அந்த அஸ்த்ரம் மந்தகதியாக விடப்படுகையாலே பின்தொடர்ந்து செல்ல, அதனைத் தப்ப வழி தேடி முதலில் தகப்பனிடம் சென்றபோது, அவனும் மாதாவாலும் கைவிடப்பட்டு பந்துக்கள் காப்பாற்றுவார்களோ?' என்று அவர்களிடம் செல்ல, அவர்களும் கைவிட்டபடியாலே, திறந்துகிடந்த வாசல்கள்தோறும் ஒரு கால் நுழைந்தாற்போலவே ஒன்பதின் கால் நுழைந்து, ஒருவரும் காப்பாற்றுவார் இல்லாமையால் சீறினும் காலைக் கட்டிக்கொள்ளலாம்படி கிருபாவானாயிருக்கையாலே ஆச்சர்யமான கல்யாணகுணங்களால் யாவரையும் மகிழ்விப்பவனே! யாவரையும் வடிவழகினால் ரமிப்பிக்கவல்லவனே! நான் உன்னை அடைக்கலம்' என்று தான் சரணாகதனானமை தோற்றப் பெருமாள் குணங்களைச் சொல்லிக் கூப்பிட, அப்பெருமான் பரமக்ருபாவானாகையாலே, முன்பு உயிரைக் கொள்ளும்படி விட்ட அந்த அஸ்த்ரத்திற்கு ஒரு கண்ணழிவு மாத்ரம் சற்பித்து, அந்தக் காகத்திற்கு ப்ராணப்ரதானம் பண்ணினதும் ஓர் அடையாளமென்கிறான் அனுமான்.

குறிப்பு:— [ஜயந்தன் என்னுங்காகாஸுரன் ஒருவன் செய்த குற்றத்தின் பயனாக எல்லாக் காகங்களும் ஒரு கருவிழியை இழந்தனவாதலால், 'ஏக: பாபாநி குருதே பலம் புங்க்தே மஹாஜந:' [ஒருவன் குற்றம் செய்கிறான்; அதன் பயனைப்பலரும் அனுபவிக்கின்றனர்.] என்னும் நீதியும் பரதாரபரிக்ரஹம் பண்ணும் பாபிகளுக்குக் கண்ணழிவு ப்ராப்தமாகுமென்னும் நீதியும் இதனால் போதரும்.]

மின்னொத்த நுண்ணிடையாய்!
மெய்யடியேன் விண்ணப்பம்
பொன்னொத்த மானொன்று
புகுந்தினிது விளையாட
நின்னன்பின் வழி நின்று
சிலைபிடித் தெம் பிரானேக
பின்னேயங் கிலக்குமணன்
பிரிந்ததுமோர் அடையாளம்.

[பொ-உரை] மின்னலைப் போன்ற மெல்லிய இடையை உடையவளே! உண்மையான பக்தனாகிய அடியேனது விண்ணப்பத்தைக் கேட்டருளவேணும். பொன்னிறத்தை ஒத்த நிறமுடைய (மாரீசனாகிய) ஒரு மான் தேவரீரெழுந்தருளியிருக்கும் ஆசிரமத்தில் பிரவேசித்து அழகாக விளையாடிக் கொண்டிருக்க, (அதை மாயமான் என்று சொல்லி) இளைய பெருமாள் விலக்கவும், உமது ஆசைக்கு ஆட்பட்டு வில்லையேந்தி ஸ்ரீராமபிரான் அந்த மான் பின்னால் போக, பிறகு அப்போதே இளையபெருமாள் உம்மை விட்டுப் பிரிந்ததும் ஓர் அடையாளமாம்.

[வி-உரை] சூர்ப்பணகையினால் தூண்டப்பட்டு ஸீதாதேவியைக் கவர்ந்து செல்லக் கருதிய ராவணனுடைய உத்தரவினால், அவனுக்கு மாதுலன் முறையான மாரீசன் என்ற ராக்ஷஸன் மாயையினால் பொன் மான் உருவம் கொண்டு தண்டகாரண்யத்தில் பஞ்சவடியிலே ஸீதையின் எதிரிற்சென்று உலாவுகையில் ஸீதை அதன் வடிவழகில் ஈடுபட்டு ராமனை நோக்கி 'இதோ பாருங்கள் இம்மானை. இது தனக்குத்தானே உவமையாகுமேயன்றி, பிறிதொரு பொருள் இதற்கு உவமையாகுமா? இதன் பற்கள் முத்தை ஒக்கும்; இதன் நா மின்னலையொக்கும்; மேனி பொன்னையொக்கும். ஆதலின் இதனை எனக்குப் பிடித்துத் தாருங்கள். இதை அயோத்திக்குக் கொண்டுபோய், தக்க ஸமயங்களில் இதனுடன் விளையாடுவேன்' எனவும், பெருமாள் அதனைப் பிடிக்க உடன்படுகையில், இளையவர் தடுத்து 'அண்ணா! இது பொன் மானல்ல; மாயமான். இது அரக்கனின் சூழ்ச்சி; இது பொய்ம்மான்;

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

13–5–56 ராத்திரி ஆத்மகூரை விட்டுப் புறப்பட்டு 10- மைல் தூரத்திலுள்ள நந்தவரத்திற்கு எழுந்தருளினார். நந்தவரத்தில் பங்களாவில் எழுந்தருளியாயிற்று. 14–5–56 ராத்திரி புறப்பட்டு 8- மைல் தூரத்திலுள்ள மாற்பேடு என்கிற இடத்தில் ரோட்டு ஓரமுள்ள சத்திரத்தில் எழுந்தருளியாயிற்று. மாற்பேட்டிலிருந்து 15–5–56 ராத்திரி புறப்பட்டு 10– மைல் தூரத்திலுள்ள கதிரிநாயுடுபல்லிக்கெழுந்தருளினார். அங்கிருக்கும் சத்திரத்திலெழுந்தருளியிருந்தார். அஹோபிலத்திற்கு 21-ந் தேதியே போய்ச் சேரவேண்டுமென்ற திருவுள்ளமாதலால் அஹோபிலத்திலிருந்து போகிகளை வரவழைத்திருந்தும் மேற்படி போகிகள் உடம்பு அஸௌகர்யமென்றும் தங்களுக்குப் பல்லக்கு எடுத்துவர சௌகர்யமில்லையென்றும் சொல்லிவிட்டு அவர்கள் ஊருக்குப் புறப்பட்டுப் போய்விட்டார்கள். இவர்கள் வந்ததும் ஏற்சனவே இருந்த தமிழ் தேசத்துப் போகிகள் ஊருக்குப் போய்விட்டபோதிலும் பெருமாள் அஹோபிலம் எழுந்தருளவேண்டிய த்வராதிசயத்தால் 'ஆசர்ஷந் த்விஜராஜமபி' என்கிறபடி அப்பொழுதிருக்கிற ஆள்களிடமும், மற்றும் வித்யார்த்திகள் கைங்கர்யபரர்களிடத்திலும் அநுப்ரவேசித்து அவர்களைக்கொண்டே அங்கிருந்து எழுந்தருள ஆரம்பித்தார். அல்லது கருடகிரிக்கு எழுந்தருளப்பண்ணிக் கொண்டுபோக வாஹனமான கருடனே அவர்களிடம் அநுப்ரவேசித்து எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போனார் என்றும் சொல்லலாம்படியிருந்தது பெருமாள் எழுந்தருளின சௌகர்யத்தையும் வேகத்தையும் பார்த்தால். கதிரிநாயுடுப்பல்லியிலேயே லக்ஷ்மி பாளையத்திலிருந்து (பெத்வேலுக்கு 2- மைலிலுள்ள அக்ரஹாரம்) ஸ்ரீ நரஸிம்ஹாச்சாரியர் முதலானவர்கள் வந்து, 40-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் காலத்தில்தான் பெருமாள் தங்களூருக்கெழுந்தருளினார். அதற்கப்புறம் எழுந்தருளவில்லையென்றும் இப்பொழுது ஸ்ரீ அழகியசிங்கரும் பெருமாளும் அவசியம் எழுந்தருளவேண்டுமென்றும் பிரார்த்தித்ததின்பேரில் அவ்வண்ணமே எழுந்தருள்வதற்கு திருவுள்ளம் பற்றியாயிற்று.

16–5–56 ராத்திரி கதிரிநாயுடுப்பல்லியிலிருந்து புறப்பட்டு 12- மைல் தூரத்திலுள்ள கருடய்யசத்திரம் என்கிற இடத்திலுள்ள ஸ்ரீ கோதண்டராமன் ஸந்நிதி பக்கத்தில் சத்திரத்தில் எழுந்தருளியிருந்தாயிற்று. அங்கிருக்கும் நடபாவியில் அநுஷ்டானம் முதலியதுகள் நடந்தன. 17–5–56 ராத்திரி புறப்பட்டு 8- மைல் தூரத்திலுள்ள லக்ஷ்மிபாளையம் அக்ரஹாரத்திற்கு எழுந்தருளினார். அக்ரஹாரவாஸிகள் வெகு ப்ரியமாய் யதாசக்தி ஆராதித்தார்கள். அவ்வூரில் சிலபேருக்கு ஸமாச்ரய

என்று முடிவில் காணுவீர்' என்று பலபடியாகத் தடுத்துச் சொல்லியும் கேளாமல், உமது வேண்டுகோளின்படி அதனைப் பிடித்தற்கு நெடுந்தூரம் தொடர்ந்து சென்றும், அது ஓட்டங் காட்டிக்கொண்டே இராமன் கைக்ககப்படாதபடி விலைமாதர் மனம்போல் அங்குமிங்கும் செல்ல, அதனைக் கடைசியில் மாயமானென்று உணர்ந்து ராமபிரான் அதனை அம்பையெய்து வீழ்த்த, அம்மாரீசன் இறக்கும்போதே 'ஹா ஸீதே! லக்ஷ்மணா! என்று ராமபிரான் கதறுவதுபோலக் கூப்பிட்டு இறக்க, அதனைக் கேட்ட தேவரீர், லக்ஷ்மணன் தேற்றவும் தேறாமல் ராமனுக்கே ஆபத்து வந்துவிட்டதென்று' திருவுள்ளத்திற்கொண்டு இளைய பெருமாள் மீது தகாத நிஷ்டூரவார்த்தைகளைச் சொல்ல, உடனே இளையபெருமாள் இராமபிரான் உள்ள இடத்திற்குப் போவதற்காகத் தேவரீரை விட்டுப் பிரிந்து சென்றதும் ஓர் அடையாளமென்கிறான் அனுமான்.

(தொடரும்)

ணம், பரந்யாஸங்கள் நடந்தன. லக்ஷ்மிபாளையத்திலிருந்து ராத்திரி புறப்பட்டு மலைகளின் நடுவிலும் காடுகள் அடர்ந்த இடங்களிலுமுள்ள ரோட்டு மூலமாய் எழுந்தருளும்போது ராணிபாய்சத்திரம் பக்கத்திலிருக்கும் குளத்தில் அநுஷ்டானத்தை முடித்துக்கொண்டு காலையில் சுமார் 10- மணிக்கு எர்ரகுண்டலாவிற்கு எழுந்தருளி அங்கு சத்திரத்தில் எழுந்தருளியிருந்தாயிற்று. அன்று ராத்ரி புறப்பட்டு 20-5-56ல் 8- மைலுள்ள மைதகூருக்கு எழுந்தருளினர். அங்கேப்ரொதட்டூர்ரோட்டோரத்திலிருக்கும் பங்களாவிலெழுந்தருளியிருந்தார். மைதகூரிலிருந்து ராத்திரி புறப்பட்டு 10மைல் தூரத்திலுள்ள துவ்வூருக்கு எழுந்தருளியாயிற்று. அவ்விடம் துவாதசி ஆராதனம் நடந்தது. 21ந் தேதியே அஹோபிலம் எழுந்தருளுவதை உத்தேசித்து மதராஸ் முதலியவிடங்களிலிருந்து வந்த சிலபேர்கள் இவ்விடமே ஸஞ்சாரத்தில் கலந்துகொண்டார்கள். அன்றையதினம் ஸாயங்காலம் 4- மணிக்குப் புறப்பட்டு 10- மைல் தூரத்திலுள்ள சாகலமர்ரி என்ற ஊருக்கு எழுந்தருளி அன்று ராத்திரி 8- மணிக்குப் பானக ஆராதனம் முதலியவை நடந்தன.

22-5-56 சாகலமர்ரியில் இஜ்யை ஆராதனம் முடித்துக்கொண்டு உடனே அஹோபிலத்திற்குக் கிளம்பி ராத்திரி 10-மணிக்கு அஹோபிலம் எழுந்தருளினர். வண்டிகளில்சிலது வெகு நாழிகை கழித்து வந்தன. வண்டிகள் வந்த பிறகு ராத்திரி ஆராதனம் நடந்தது. 23-5-56 நரஸிம்ஹஜயந்தியன்று நம்மாழ்வார் திருநக்ஷத்திரமானதால் காலையிலேயே அபிகமனத்தில் திருவாய்மொழி ஸேவை தொடக்கமாகி 4-பத்துவரை ஸேவித்து சாற்றுமுறையாயிற்று. அன்று 7-ம் பட்டம் ஸ்ரீ ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடையவும், 10-ம் பட்டம் ஸ்ரீ ஶடகோபமஹாதேசிகனுடையவும் திருநக்ஷத்ரங்களானபடியால் அவ்விரு அழகியசிங்கர்களுடைய ஸம்பாவனைகளும் பண்ணப்பட்டது. மத்யாஹ்னம் (புராணம்) ஸ்ரீபாகவதம் நரஸிம்ஹாவதாரகட்டம் ஸேவிக்கப்பட்டு பிறகு ஸேவை தொடங்கி பாக்கி திருவாய்மொழியும் ஸேவை நடந்தது. மீதி வண்டிகள் அன்றையதினம் ஸாயங்காலம்தான் வந்துசேர்ந்தன. ப்ரதோஷகாலத்தில் பெரிய பெருமாளுக்கும் கண்ணனுக்கும் திருமஞ்சனமாகி சாற்றுமுறை ஸம்பாவனைகள் நடந்து ததீயாராதனமும்நடந்தது.

மறுதினம் 24-5-56 அபிகமன ஆராதனமானதும் திருமுடி விளக்கத்திற்காக ஆழ்வார் தீர்த்தத்திற்கு எழுந்தருளி திருமுடி விளக்கமாகி அநுஷ்டானமாகி அங்கிருந்து ஸ்தோத்ர பாராயண கோஷ்டியுடன் கோயிலுக்கு எழுந்தருளி மங்களஹாரத்தி ஆகி ததீயாராதனமும் சீக்கிரம் முடிந்தது. அன்று ஸாயங்காலம் 3-மணிக்குப் புறப்பட்டு சக்ரவடன் ஸந்நிதி முழுவதும் புதுப்பித்துக் கட்டப்பட்டதையும் கடாக்ஷித்து பெருமாளை ஸேவித்து விட்டுப் பிறகு யோகாநரஸிம்ஹன் ஸந்நிதிக்கெழுந்தருளி அதில் ரிப்பேர் செய்யப்பட்டதையும் கடாக்ஷித்துவிட்டு பெருமாளையும் ஸேவித்துவிட்டு எழுந்தருளியாயிற்று. போகும்போது கொஞ்சம் மழை பெய்தது. அன்று சந்திரக்ரஹணமானதால் ராத்திரி க்ரஹணகாலத்தில் திருவாராதனங்கள் நடந்தன.

25-5-56 காலையில் அபிகமனம் இஜ்யை ஆன பிறகு மத்யாஹ்னம் புறப்பட்டு மேலஹோபிலத்திற்கு எழுந்தருளியாயிற்று. வழியில் காரஞ்சநரஸிம்ஹன், ஹநுமான் ஸந்நிதிகள் ரிப்பேர் செய்யப்பட்டதையும் கடாக்ஷித்துவிட்டு பெருமாளையும் ஸேவித்தாயிற்று. ஸாயங்காலம் பவநாசநியில் நீராட்டமாகி ராத்திரி பெருமாள் எல்லோரையும் குகையிலேயே எழுந்தருளப்பண்ணி ராத்திரி ஆராதனம் நடந்தது. மறுநாள் திருக்கேட்டையாயிருந்தபடியால் பெரிய பெருமாளுக்கும் கண்ணனுக்கும் பவநாசநி தீர்த்தத்தினால் திருமஞ்சனம் நடத்தி அபிகமன ஆராதனத்தையும் கோஷ்டியையும் முடித்துக்கொண்டு பெரியபெருமாள் கண்ணன் ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கர் 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் இவர்களை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு மாலோலன் ஸந்நிதிக்கு எழுந்தருளியாயிற்று. வழியில் க்ரோடாநரஸிம்ஹன் ஸந்நிதிக்கும் எழுந்தருளி பெருமாளை ஸேவித்தாயிற்று. மாலோ

லன் ஸந்நிதியிலிருந்து அரை மைல் தூரத்திலுள்ள பிரஹ்லாதபண்டைக்கு எழுந்தருளி அவ்விடமுள்ள அருவியின் வீழ்ச்சியில் மாத்யாஹ்நிக ஸ்நானம் அநுஷ்டாநங்களை முடித்துக் கொண்டு மாலோலன் ஸந்நிதிக்கு எழுந்தருளி அவ்விடத்தில் இஜ்யை ஆராதனமும் சர்க்கரைப்பொங்கல் தளிகையும் கண்டருளப் பண்ணியாயிற்று. அன்று 35-ம் பட்டம் (களத்தூர் அழகியசிங்கர்) ஸ்ரீ ரங்கநாதய்தீந்த்ரமஹா தேசிகன் திருநக்ஷத்ரமாகையால் சாற்றுமுறை, ஸம்பாவனை நடந்தது. அவ்விடத்திலேயேபரந்யாஸம் ஆகவேண்டுமென்று ப்ரார்த்தித்தவர்களுக்குப் பரந்யாஸம் ஆயிற்று. அந்த ஸந்நிதியில் செய்யவேண்டிய ரிப்பேர்களை கடாக்ஷித்து அவைகளைச் செய்யும்படி நியமித்தாயிற்று. மேல் அஹோபிலத்தில் செய்த ரிப்பேர்களை கடாக்ஷித்து மேற்கொண்டு செய்யவேண்டியவைகளையும் ஏற்பாடு செய்தாயிற்று. இதுவரையில் சுமார் நாலாயிரம் ரூபாய் வரையில் ரிப்பேர் நடந்திருக்கிறது. இவ்விடமிருந்து மத்யாஹ்னம் புறப்பட்டு ராத்திரி சுமார் 7-30 மணிக்கு கீழ் அஹோபிலம் எழுந்தருளியாயிற்று. மறுதினம் பார்க்கவதீர்த்தம் எழுந்தருளி பார்க்கவநரஸிம்ஹனையும் ஸேவித்தாயிற்று. கீழ் அஹோபிலத்தில் முன் எழுந்தருளியிருந்தபோது நடந்தமாதிரி தினமும் காலையில் விச்வரூபம், அபிகமனம், பாராயணம், காலக்ஷேபமானபிறகு பிரதக்ஷிணமாக தாயார் ஸந்நிதிக்கு எழுநதருளி ஆராதனம் மங்களாசாஸனமாகி பிறகு பெருமாள் ஸந்நிதிக்கெழுந்தருளி அவ்விதமே அங்கேயும் நடத்தி, இப்பொழுது பாஷ்யகாரர் எழுந்தருளியிருக்குமிடத்தில் ஆச்ரமம் அமைத்துக்கொண்டிருக்கிற இடத்திற்கு எழுந்தருள்வது வழக்கமாயிருக்கிறது. காலையில் திருவாய்மொழி, திருவாராயிரம், முப்பத்காராயிரப்படி காலக்ஷேபமும் மத்யாஹ்னத்தில் ந்யாயஸித்தாஞ்ஜனம் காலக்ஷேபமும் நடந்துவருகிறது. 31-5-56 அன்று 27-ம் பட்டம் ஸ்ரீவீரராகவவேதாந்தயதீந்த்ர மஹாதேசிகன் (ஸ்ரீ அழகியசிங்கருடைய) திருநக்ஷத்திரம் ஸேவை சாற்றுமுறையுடன் விமரிசையாக நடத்தப்பட்டது.

6-6-56 அன்று 39 ம் பட்டம் (மன்னார்குடி அழகியசிங்கர்) ஸ்ரீ பராங்குச யதீந்த்ர மஹா தேசிகனது திருநக்ஷத்ரமாகையால் ஸேவை, சாற்றுமுறை, ஸம்பாவனைகள் நடந்தன. அன்றுதான் கத்தவாலிலிருந்து போகிகள் வந்தமையால் அன்று ஸாயங்காலம் ப்ரதோஷாராதனத்தை முடித்துக்கொண்டு ராத்ரி புறப்பட்டு 15 மைல்தூரமுள்ள அல்லகட்டாவுக்கு எழுந்தருளியாயிற்று.

(தொடரும்)

– திருத்தம் –

1. பாராஞ்சி கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் க்ருஹத்தில் பாப்பநல்லூர் ராஜா என்கிற ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாச்சாரியரால் ராத்திரி டோலோத்ஸவமும் விசேஷ தளிகைகளும் பெருமாளுக்கு ஸமர்ப்பிக்கப்பட்டது.

2. திருவல்லிக்கேணியில் ஸ்ரீ அஹோபிலமடத்தில் எழுந்தருளியிருக்கும் பொழுது பாரி அண்டு கம்பெனியாரால் கண்ணனுக்கு வீதிஉத்ஸவம் வேதபாராயணகோஷ்டிகளுடன் விசேஷமாகப் பண்ணிவைக்கப்பட்டது.

ஸ்ரீ:

ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த

மஹாவீர வைபவம்

(சென்றஸஞ்சிகையின் தொடர்ச்சி)

(கரு) மஹர்ஷிகளை எப்போதும் தூஷித்துவந்ததால் தூஷணன் என்ற பெயர் பெற்ற ராக்ஷஸஸேநாபதியும் ஸ்ரீராமபத்ரனுடன் போரிடத் தொடங்கினான். ஸ்ரீராமபத்ரனும் இரு பாணங்களை ப்ரயோகித்து தூஷணனின் இரு கரங்களைத் துண்டித்துவிட்டான். உடனே மரம்போல் தரையில் வீழ்ந்து தூஷணன் மடிந்தான். இதைக் கண்ட மஹர்ஷிகள் மிக்க ஸந்தோஷம் கொண்டனர். ஸ்ரீராமபத்ர! நீர் லோகோத்தரமான கார்யம் செய்தீர். என்று விஜயகோஷம் செய்து கொண்டாடினர். அகஸ்த்யமுனிவரால் ஜலம் வற்றும்படிச் செய்யப்பட்ட கடல்போல பகவானால் தூஷணன் ப்ராணஹீனனாகச் செய்யப்பட்டான். இங்கு ரிஷிக் கூட்டமெல்லாம், தூஷணஸமுத்ரத்தை பகவான் வற்றச் செய்ததைக் கொண்டாடியது என்று கூறப்பட்டிருப்பதால் அக்கூட்டத்தினருள் ஒருவராகிய அகஸ்த்ய முனிவரும் ,நம்மால் வற்றச் செய்யமுடியாத தூஷணஸமுத்ரத்தை ஸ்ரீராமபத்ரன் வற்றச் செய்தான். என்னே ஸ்ரீராமபத்ரனின் மஹிமை' என்று கொண்டாடினார் என்பது ஸூசிக்கப்படுகிறது. 'தம் த்ருஷ்ட்வா பதிதம் பூமௌ தூஷணம் நிஹதம் ரணே । ஸாது ஸாத்விதி காகுத்ஸ்தம் ஸர்வபூதாந்யபூஜயந்' என்கிற ஸ்ரீராமாயணச்லோகமிங்கு ஸ்மரிக்கத்தக்கது. ஸ்ரீராமபத்ரனின் பாணங்கள் பட்டுத் தரையில் வீழ்ந்து மடிந்த தூஷணனைக் கண்ட ஸர்வபூதங்களும் ,நல்லது செய்தாய்' எனக் கூறி ஸ்ரீராமபத்ரனைக் கொண்டாடின என்பது இதன் பொருள். ஸ்ரீராமாயணத்தில் முதலில் தூஷணனையும், பிறகு த்ரிசிரஸ்ஸையும், அதன் பிறகு கரனையும் ஸ்ரீராமபத்ரன் வதம் செய்ததாகக் கூறப்பட்டிருக்க, இங்கு நம் ஸ்வாமி த்ரிசிரஸ், தூஷணன், கரன் என்றிவர்களை முறையே ஸ்ரீராமபத்ரன் வதம் செய்ததாகக் கூறியிருப்பதற்குக் காரணம் யாதெனில்:– மஹாவீரனான ஸ்ரீராமபத்ரன் ஜனஸ்தானத்தில் ஏகாகியாயிருந்து கரதூஷணாதிகளை வதம் செய்து தன்னுடைய வீர்யாதிசயத்தை வெளிப்படுத்தினான் என்பதைத் தெரியப்படுத்த வேண்டுமென்கிற நோக்கமே இதற்குக் காரணம். ஸ்ரீராமபத்ரனின் வீர்யாதிசய ப்ரகாசநத்திலீடுபட்ட அகம்பனன் என்ற ராக்ஷஸனும் சூர்ப்பணகையும் ராவணனிடம் சொல்லும்போது 'ஹதம் தேந ஜநஸ்தாநம் கரஶ்ச ஸஹதூஷண:' என்றும், 'ஹதாந்யேகேந ராமேண கரஶ்ச ஸஹ தூஷண:' என்றும் முறையே கூறியிருப்பது இதற்குத் தக்க சான்றாகும். 'கரஶ்ச நிஹதஸ் ஸங்க்யே தூஷணஶ்ச நிபாதித: । ஹதஶ்ச த்ரிசிராஶ்சாபி' என்று ராவணன் மாரீசனிடம் பேசுவதையும் இங்கு அநுஸந்திக்க ப்ராப்தம்.

खरतर खरतरु खण्डन चण्डपवन! கரதர கரதரு கண்டந சண்டபவந!

(ப-உரை) கரதர– மிகவும் க்ரூரனான, கர–கரன் என்ற ராக்ஷஸாதிபதியாகிற, தரு– மரத்தை, கண்டந– முறிப்பதில், சண்டபவந– சண்டமாருதம் போன்ற ஸ்ரீராமபத்ர!

(கரு) சண்டமாருதமெனும் பெருங்காற்று மரத்தை வீழ்த்துவது போல ஸ்ரீராமபத்ரன் ஜநஸ்தாநவாஸிகளான ராக்ஷஸர்களின் தலைவனான கரனை பாணவர்ஷத்தினால் ஸம்ஹரித்தார். கரனோடு போர் புரியும்போது கரன் வேகமாகத் தன் ஸமீபம் நெருங்குவதைக் கண்ட ஸ்ரீராமபத்ரன் கரனை நோக்கியபடியே சிறிது பின்புறமாக நடந்து போரிட்டதாக ஸ்ரீராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது. அபஸரணம் என்ற இச்செயல் மஹாவீரர்களுக்கு உசிதமன்று என்று சிலர் ஆக்ஷேபிக்கிறார்கள். இந்த ஆக்ஷேபம் ஸரியன்று. ஏனென்றால்

எதிரிக்கு முதுகு காட்டிப் போவதும், போர்க்களத்தைவிட்டு ஓடுவதுமே வீரர்களுக்குக் கூடாத அபஸரணமாகும். இங்கு ஸ்ரீராமபத்ரன் அப்படிப்பட்ட அபஸரணத்தைச்செய்ய வில்லை. எதிரிமேல் பாய்வதற்குத் தயாராகும் புலி எதிரியைப் பார்த்துக்கொண்டேபின் புறம் சிறிது நடந்து செல்வதுபோலவே இங்கும் ஸ்ரீராமபத்ரன் வேகமாய்த் தன் ஸமீபம் நெருங்கும் கரனை ஸம்ஹரிக்க எண்ணியவனாய் பாணப்ரயோகம் செய்ய அவகாசம் பெறுகைக் காகக் கரனைப் பார்த்துக்கொண்டே பின்புறம் அபஸரணம் செய்தான். ஆகையால் இது மிகவும் போற்றத் தக்கதாகும். இவ்விஷயத்தை நம் ஸ்வாமி தேசிகன் வேறோரிடத்தில் 'நிரவதிகுணக்ராமே ராமே நிராகஸி' என்றுதொடங்கும் ச்லோகத்தினால்விவரித்திருக்கிறார். எல்லையற்ற குணங்கள் நிறைந்த ஸ்ரீராமபத்ரன் குற்றலேசமுமில்லாதவன். ஆயினும் சிலர் 'பெண்ணைக் கொன்றான். வாலிக்குத் துரோகம் செய்தான், கரனுடன் போரிடும்போது சிறிது அபஸரணம் செய்தான்' என்பது போன்றவைகளைக் குறைகளாகப் பெரியோரிடம் சென்று வாய் கூசாமல் பேசுகின்றனர். இது இவர்களின் மதியீனத்தைக் காட்டுமே ஒழிய ஸ்ரீராமபத்ரனுக்குக் குறையுண்டாக்காது என்பது அச்ச்லோகத்தின் பொருள். 'சண்ட பவந' என்று சண்டமாருதத்தை ஸ்ரீராமபத்ரனுககு த்ருஷ்டாந்தமாகக் கூறுகிற இந்த சூர்ணிகையாலு மிவ்விஷயத்தை நம் ஸ்வாமி ஸூசிக்கிற தோரணி கவனிக்கத்தக்கது. அடர்ந்த மரங்கள் எதிர்ப்படும்போது, வீசும் பெருங்காற்று கொஞ்சம் பின்வாங்கிச் சென்று மரங் களை யழிப்பதை அவ்வோ ஸமயத்தில் அறிகிறோமல்லவா.

द्विसप्तरक्षस्सहस्र नळवन विलोलन महाकलभ!

த்விஸப்தரக்ஷஸ்ஸஹஸ்ர நளவந விலோளந மஹாகளப!

(ப-உரை) த்விஸப்தரக்ஷஸ்ஸஹஸ்ர– பதிநாலாயிரம் ராக்ஷஸர்களாகிய, நளவந–தாமரைக் காட்டை, விலோளந- அழிப்பதில், மஹாகளப–உயர்ந்த யானைபோன்ற ஸ்ரீராமபத்ர!

(கரு) கரன் முதலிய ராக்ஷஸத் தலைவர்களின் ஆணைக்குட்பட்டு ஜநஸ்தாநத்தில் வாழ்ந்து வந்த பதினான்கு ஆயிரம் ராக்ஷஸர்களும் ஸ்ரீராமபத்ரனுடன் போரிட்டு மடிந்தனர். பெரிய யானை அநாயாஸமாகத் தாமரைக் காட்டை அழிப்பதுபோல ஸ்ரீராமபத்ரன் இவ்விராக்கதர்களையழித்தான். இங்கு 'நளவந' என்பதற்குக் 'கோரைப் புற்காட்டை' என்று பொருள் கூறுவாருமுளர். 'நளவநமிவ ம்ருத்நந் பாபராசிம் நதாநாம் கருடஸரிதநாபே கந்தஹஸ்தீவ தீவ்யந்' என்ற தேவநாயகபஞ்சாசத்தின் ச்லோகபாகமிங்கு ஸ்மரிக்கத் தக்கது. கருடநதியின் படுகையில் விளையாடிவரும் தேவநாதன் நளவநத்தை உயரிய யானை யழிப்பதுபோல ப்ரபந்நர்களின் பாபங்களை யழிக்கின்றான் என்பது இதன் பொருள். முப்பது வயது கொண்ட யானைக்குக் களபம் என்று பெயர்.

असहायशूर! அஸஹாயசூர!

(ப-ரை) ஸஹாயமில்லாத- ஸஹாயத்தை விரும்பாத, சூரனான ஸ்ரீராமபத்ர!

(கரு) போரில்தனக்குத்துணையை விரும்பாது தனிவீரனைத்திகழ்ந்தவன் ஸ்ரீராமபத்ரன். நம் ஸ்வாமி ஸ்ரீராமபத்ரனின் பராக்ரமவிசேஷத்தை எண்ணி ஆச்சரியரஸக் கடலிலாழ்ந்து 'அஸஹாயசூர' என்றும் 'அநபாயஸாஹஸ' என்றும் ஸ்ரீராமபத்ரனைப் புகழ்ந்து

பேசுகிறார். கரன் முதலானோரோடு ஸ்ரீராமபத்ரன் சண்டையிட நேரிட்டதைக் கண்டு தேவர்கள் முதலிய யாவரும் 'கூடயுத்தத்தில் கைதேர்ந்த பதினாலாயிரம் ராக்ஷஸர்களுடன் தர்மாத்மா ஸ்ரீராமன் தனித்தவனாகப் போரிடுகின்றான். இதன் முடிவு எவ்வாறிருக்குமோ என்று ஆரம்பத்தில் சங்கை கொண்டிருந்தும் தாங்கள் எண்ணியதற்கு அடுத்த ஒன்றரை முகூர்த்தகாலத்தில் பரிவாரத்துடன் ஸகலராக்ஷஸபலத்தையும் ஸ்ரீராமபத்ரன் பாணங்களாலழித்ததைக்கண்ட அவர்களே வியப்புற்று 'அஹோ வீர்யம் அஹோ தார்க்ஷ்யம் விஷ்ணோரிவ ஹி த்ருச்யதே'என்று ஸ்ரீராபபத்ரனைக்கொண்டாடிப்பேசினரல்லவா. ஸ்ரீவிஷ்ணுவினிடம் போல ஸ்ரீராமபத்ரனிடம் ஆச்சர்யகரமான பராக்ரமமும் பாணப்ரயோகஸாமர்த்யமும் காணப்படுகிறது' என்பது இதன் பொருள். எவ்வளவு பலசாலியாயிருப்பினும் ஒத்தாசையில்லாதபோது பிறரால் பரிபவப்படுவதை உலகில் காண்கின்றோம். ஸ்ரீராமபத்ரனோ ஸஹாயமே விரும்பாது தனித்திருந்து பதினாலாயிரம் ராக்ஷஸர்களைக் கொன்றுவிட்டான். மேலும் தினமென்றும், மாஸமென்றும், வருஷமென்றும் கணக்கிடப்படும் நீண்ட காலத்தில் ஸம்ஹாரம் செய்யாமல் மூன்று கடிகை காலத்திலேயே அழித்துவிட்டான். என்னே ஸ்ரீராமபத்ரனின் சௌரியமென்பது பரமதாத்பர்யம்.

अनपायसाहस! அநபாயஸாஹஸ!

(ப-உரை) தடைபடாத ஸாஹஸ காரியமுள்ள ஸ்ரீராமபத்ர!

(கரு) ஒருவனாயிருந்து பலிஷ்டரான ராக்ஷஸர்களுடன் போரிடச்சென்றது பெருந்துணிச்சலான காரியம். மேலும் போரில் வெற்றி பெற்றது அக்காரியத்தின் பெருமையைக் குறிக்கிறது. உலகில் துணிச்சலுடன் ஆரம்பிக்கும் காரியங்களிற் சில பயனைத்தரும்; சில பயனைத் தரா என்பது ப்ரஸித்தம். இப்படியிருக்க ஸ்ரீராமபத்ரன் துணிச்சலுடன் சண்டையில் வெற்றி பெற்றது உலகம் வியக்கத்தக்கதே.

महितमहामृधदर्शन मुदित मैथिलीदृढतरपरिरंभणविभवविरोपितविकटवीरव्रण!

மஹிதமஹாம்ருததர்சந முதித மைதிலீத்ருடதரபரிரம்பண விபவ விரோபித விகட வீரவ்ரண!

(ப-ரை) மஹித- கொண்டாடப்பட்ட, மஹாம்ருத- பெரியசண்டையை- சண்டையிட்டதாலுண்டான அடையாளத்தை, தர்சந- கண்டதனால், முதித- ஸந்தோஷங்கொண்ட, மைதிலீ - ஸீதையினுடைய, த்ருடதர- கெட்டியான, பரிரம்பண- ஆலிங்கனத்தின், விபவ-ப்ரபாவத்தினால், விரோபித- சிகித்ஸை செய்யப்பட்ட- போக்கடிக்கப்பட்ட, விகட- விசாலமான, வீரவ்ரண- (சண்டையிடும்போது எதிரியின் அம்புகளாலுண்டாகும்) வீரவ்ரணத்தையுடைய ஸ்ரீராமபத்ர!

(கரு) கரன் முதலிய எல்லா ராக்ஷஸர்களையும் சண்டையில் கொன்று ஜயலக்ஷ்மியுடன் ஸ்ரீராமபத்ரன் பர்ணசாலைக்குத் திரும்பி வருகின்றான். இதைக் கண்ணுற்ற ஸீதை பரமானந்தத்துடன் எதிர்சென்று அவனை இறுகக் கட்டித் தழுவிக் கொள்கின்றாள். இப்படி மைதிலி நாற்புறமும் தன்னைக் கட்டியணைக்க ஸ்ரீராமபத்ரனும் போர்க்காலத்தில் எதிரி

களின் அம்புகளால் தன் திருமேனியிலேற்பட்ட ரணகாயங்கள் நீங்கப்பெற்றுப் பரமானந்த மடைந்தார். ஸ்ரீராமபத்ரன் காட்டுக்குப் புறப்பட்ட காலத்தில் ‘மிதிலாதிபதியான என் பிதா ஆணாருக்கொண்டிருக்கும் பெண்ணான உன்னை மாப்பிள்ளையாகப் பெற்று என்ன எண்ணினானோ’ என்றிவ்வாறு எந்த மைதிலி ஸ்ரீராமபத்ரனைக் கோபத்தினால் பழித்துப் பேசினாளோ அவளே கராதிகளைக் கொன்று விஜயசீலனாய்த் திரும்பும் தன் பர்த்தாவைக் கண்டு மகிழ்ச்சியுடன் அவன் செய்த வீரச் செயலுக்கு பரிசளிப்பவள் போல அவனை நாற்புறமும் நெருக்கமாகத் தழுவி மகிழ்ந்தாள் என்பது பரமதாத்பர்யம். ‘தம் த்ருஷ்ட்வா சத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகாவஹம் | பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ பர்த்தாரம் பரிஷஸ்வஜே ||’ என்கிற ஸ்ரீராமயணச்லோகம் இங்கு அநுஸந்திக்கத்தக்கது. சத்ருக்களையழித்து முனிவர்களுக்குச் சுகமளித்த தன் பர்த்தாவான ஸ்ரீராமபத்ரனைக் கண்ட ஸீதாதேவி மகிழ்ச்சியுடன் அவனை நாற்புறமுமிறுகத்தழுவினாள் என்பது இதன் பொருள். இங்கு ‘மஹித- கொண்டாடப்பட்ட, மஹாம்ருத- பெரிய போரையுடைய ஸ்ரீராமபத்ரனுடைய, தர்சந- தர்சநத்தினால்’ என்று பொருள் கூறுவாருமுளர்.

मारीचमायामृगचर्मपरिकर्मितनिर्भरदर्भास्तरण!

மாரீசமாயாம்ருகசர்மபரிகர்மித நிர்பரதர்பாஸ்தரண!

(ப-ரை) மாரீச- மாரீசன் என்ற, மாயாம்ருக- மாயையினால் மான்ரூபம் கொண்ட ராக்ஷஸனுடைய, சர்ம- தோலினால், பரிகர்மித- அலங்கரிக்க விரும்பப்பட்ட, நிர்பர–பூர்ணமான, தர்பாஸ்தரண- தருப்பைமயமான ஆஸநத்தையுடைய ஸ்ரீராமபத்ர!

(கரு) மாயையினால் மான் ரூபங்கொண்டு மாரீசன் என்னும் ராக்ஷஸன் ஸ்ரீராமபத்ரனின் பர்ணசாலைக்குச் சமீபத்தில் ஸஞ்சரிக்கின்றான். தங்கமயமான மான் என்றே இவனைக் கருதிய ஸீதை இம்மானைப் பிடித்துத் தரவேண்டுமென ஸ்ரீராமபத்ரனை ரொம்பவும் வேண்டுகின்றாள். இதற்கிணங்க அம் மானைத் தொடர்ந்து ஓடி முடிவில் கோபமுற்று ஸ்ரீராமபத்ரன் பாணத்தினால் கொன்றுவிடுகிறார். உடனே உயிர்விட்ட மாரீசனின் மாயா மானுருவமும் மறைகின்றது. இதையனுஸரித்தே இங்கு (விருப்பம்) ஆசம்ஸை என்ற பொருள் கொண்டதாக ‘பரிகர்மித’ சப்தம் வர்ணிக்கப்பட்டது. ‘நிஹதஸ்யாஸ்ய ஸத்வஸ்ய ஜாம்பூநதமயத்வசி | சஷ்பப்ரஸ்யாம் விநீதாயா மிச்சாம்யஹமுபாஸிதும் ||’ (கொல்லப்பட்ட இம்மானின் தங்கமயமான தோலை தர்ப்பாஸநத்தின் மேல் விரித்து உட்கார நான் விருப்புகின்றேன்) என்று ஸீதை கூறுவதும் ‘ஏதஸ்ய ம்ருகரத்நஸ்ய பரார்த்யே காஞ்சநத்வசி | உபவேக்ஷ்யதி வைதேஹீ மயா ஸஹ ஸுமத்யமா ||’ (உயரிய இம்மானின் பொன்மயமான தோலின் மேல் அழகிய இடுப்புள்ள வைதேஹி என்னுடன் உட்காருவாள்) என்று ஸ்ரீராமபத்ரன் பேசுவதும் மேற்கூறியவாறு பொருள் கொள்வதற்குத் தக்க சான்றாகும். ஸேதுபந்தநகாரியத்தில் அணில்கள் செய்த உதவியை வால்மீகி பகவான் குறிக்காதுபோயினும் ஆழ்வாரின் ஸூக்திபலத்தாலங்கீகரிப்பதுபோல ஸ்ரீராமாயணத்தில் கூறப்படாதிருப்பினும் நம் ஸ்வாமி தேசிகனின் ஸூக்திபலத்தினால் பொன் மான்தோலை ஸ்ரீராமபத்ரனுபயோகித்துக் கொண்டான் என்று இசைவதில் ஒரு குறையுமில்லையென்று கூறுவாருமுளர்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ராஜா:— மஹாயோகேச்வரியான பகவதி! அப்படிக் கூறலாகாது.

கிம் விஜ்ஞாநை: கிம் தபோதாநயஜ்ஞை:
கிம் வாऽந்யைஸ் த்வத்விரஹிதை: ।
ஜ்ஞாதும் த்ரஷ்டும் தத்த்வதஸ் த்வாம் ப்ரவேஷ்டும்
ஶக்யம் ப்ரஹ்லாதநந்த்யாஹ்ஜா த்வயைவ ॥

கேவலவிஜ்ஞாநங்களால் பயனென்ன? கேவல தபஸ், தாநம், யஜ்ஞமிவற்றால் என்ன பயன்? கேவலம் மற்றவைகளால் தானென்ன? கேவலம்; வெறும் என்பதற்குப் பொருளென்ன வென்றால், த்வத்விரஹிதை:— உம்மோடு சேர்ந்திராததால் இளைத்து சக்தியற்ற வெறும் விஜ்ஞாநமாத்ரத்தால், வெறும் தபஸ்ஸால், வெறும் தானத்தால், வெறும் யஜ்ஞத்தால் என்று பொருள். ‘நாஹம் வேதைர்ந தபஸா ந தாநேந ந சேஜ்யயா। ஶக்ய ஏவம்விதோ த்ரஷ்டும் த்ருஷ்டவாநஸி மாம் யதா॥ பக்த்யா த்வநந்யயா ஶக்ய அஹமேவம்விதோऽர்ஜுந। ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்த்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப’ என்று விச்வரூபஸேவை தந்தபிறகு அந்த அத்யாய முடிவில் ஸாதித்த ச்லோக வார்த்தைகளே இங்கே யுள்ளன. ‘தத்த்வதஸ்’ என்பதை மூன்றோடும் அந்வயிக்கவேணும். ஜ்ஞாநம் தர்சநத்திற் சேர்க்கும். தர்சநம் ப்ரவேசத்திற் சேர்க்கும். ஜ்ஞாநம் என்பது ப்ரபத்தி என்றும், தர்சனமென்பது பரஜ்ஞானமான தர்சனமென்றும், அதன்பேரில்முற்றும் பரம பக்தியான நிரதிசயத்வரையால் வரும் ப்ரவேசமென்றும் சந்த்ரிகை. விச்ரூபத்தோடேயே ‘ந வேதயஜ்ஞாத்யயநைர்ந தாநைர் ந ச க்ரியாபிர் ந தபோபிருக்ரை:। ஏவம்ரூப: ஶக்ய அஹம் ந்ருலோகே த்ரஷ்டும் த்வதந்யேந குருப்ரவீர’ என்று ஸாதித்த ச்லோகமும் இங்கே கூறப்படுகிறது. பக்தி ப்ரீதிஹாவம் சேர்ந்தால்தான் எல்லாம் பயன் படுமென்பதை ஒரே அத்யாயத்தில் திரும்பவும் திரும்பவும் ஸாதித்தார். நாடகமுதலிலும் முதல் ச்லோகத்தில் கீதை நினைவு. இங்கும் கீதை நினைவு.

விஷ்ணுபக்தி:— (ஆலோசித்து) எப்படியேனுமிருக்கட்டும். எனக்கு ப்ரத்யக்ஷமாய்த் தெரியும் நீர் விரும்பியதை ஸாதித்தது. ஆயினும் எல்லாம் பகவத்கர்த்ருகம் தானே என்ற நிச்சயத்தையும் தத்வத்தையும் அவலம்பித்து இப்படி நினைக்கிறீர், கூறுகிறீர். புருஷனுக்கு பகவத் தயையினால் இப்பொழுது ஸம்ஸாரத்தைத் தாண்டுவது நிச்சயம். பரமபத ப்ரவேசமும் ஸித்தம். இன்னும் உமக்கு என்ன ப்ரியத்தை ஸமர்ப்பிக்கவேணும்; சொல்லும். (இங்கே பலப்ராப்தி யெனும் ஸந்த்யங்கம். இது பலாகமமெனும் முக்யமுமாகிறது.)

ராஜா:— மஹாநுபாவையான தேவியே!

கிம் ப்ரியம் பரமத: ப்ரதிபாதநீயம்
பத்மாஸஹாயபதபங்கஜஜுஷா ஸதத்யா ।
பஶ்யாமி யத் த்வதுருஷே வசோதக்ஷ்வக்ஷம்
நாகாஶஸாக்ஷிவ நாஹர்நிஶம் வாஸிதக்ஷு ॥

‘ப்ரவிஶதி ச பரம் பதம்’ என்று கூறுகையில் சாந்தோக்யமுடிவிலுள்ள ‘ப்ரஜாபதே: ஸபாம் வேஶ்ம ப்ரபத்யே’ என்று திருமாமணிமண்டபத்திற்குச் செல்லும் தருணத்திலுள்ள மனோரதாநுபவத்தைக் காட்டிய ச்ருதியின் நினைவு. அதற்கு முன் கண்ட ச்ருதிவாக்யம். ‘அஶ்வ இவ ரோமாணி விதூய பாபம் சந்த்ர இவ ராஹோர்முகாத் ப்ரமுச்ய தூத்வா ஶரீரம் அக்ருதம் க்ருதாத்மா ப்ரஹ்மலோகமபிஸம்பவாமீத்யபிஸம்பவாமீதி’ என்பது நெஞ்சிலுள்ளதை யநுஸரித்து இங்கே

மோக்ஷாவஸாநடப்பை வர்ணிக்கிறார். பகவத் ஸங்கல்பத்தை இங்கே ஸூர்யனாகவும், அந்த ஸங்கல்பத்தின் பரிபாகோதயத்தை ஸங்கல்ப ஸூர்யோதயமாகவும் இந்நாடக நிர்மாண க்ரமம். 'ப்ரபோதசந்த்ரோதயம்' என்று மோக்ஷம் தரும் அபரோக்ஷ ஜ்ஞாநத்தின் உதயம் காட்டப்பட்டது. முக்திநகர் ஸபாமண்டபத்தை ப்ரவேசிக்கும் மோக்ஷத்தை வர்ணிக்கையில் இந்த சாந்தோக்ய ச்ருதி மோக்ஷம் செல்லும் முக்த ஜீவனை சந்த்ரனாக வர்ணித்தது. மோக்ஷம் செல்லும் ஜீவனுடைய அநுஸந்தானத்தின் முன்புமக்காலத்திலுமுள்ள ரீதியை ச்ருதி காட்டியது. குதிரை தன் ரோமங்களை உதிர்ப்பதுபோல் பாபங்களையெல்லாம் உதரிவிட்டு, ராஹுவின் வாயில் சிக்கிக்கொண்டிருந்த சந்த்ரன் ராகுக்ரஹணத்திலிருந்து விடுபட்டு விஷ்ணுபதத்தில் (ஆகாயத்தில்) முழுவொளியோடு ப்ரகாசிப்பதுபோலவும் சரீரத்தையும் உதரிவிட்டு க்ருதார்த்தனாய் நித்யமான பரப்ரஹ்மலோகத்தை அடைவேனாக, அடைவேனாக' என்று பாரிப்பு. இப்படி ஜ்ஞானஒளிக்கலைகள் பூர்ணமாகி ராகுவான (சாயாக்ரஹ) ஸம்ஸாரக்ரஹத்திலிருந்து விடுபட்டு சரீரத்தை உதரிவிட்டு நிரபாயவிஷ்ணுபத ஸப்ச்ரயாரவதைப் பார்த்து மகிழ்ச்சியுடன் விவேகர் கூறுகிறார். ஜ்ஞானக்கண்ணுடையவரிந்த ஆச்சர்ய மங்களக் காக்ஷியைக் கண்டு 'பஶ்யந்தி ஜ்ஞாநசக்ஷுஷ:' என்று கீதை. விவேகர், ஸுமதி, விஷ்ணுபக்தி பார்த்து நமக்கு அறிவிக்கிறார்கள். அத:– இதைக் காட்டிலும் அதிவாஞ்சநீயம்– தாமே வேண்டியதான, த்வதீயம் கிம்– மற்றோர் ப்ரியமென்ன வுளது. அத:– இதனிலும் வேறான, இதற்கு அதிகமான வேண்டக்கூடிய அந்த ப்ரியமென்ன வுளது. ஶ்ரீரங்கநாராயணபதபங்கஜஸேவா ஸததம்– ஸ்ரீரங்கநாராயண கமலசரணங்களோடு கூடியுள்ள அச்சரணகமலங்களை அநவரதம் ப்ரீதியோடு ஸேவித்துக்கொண்டு வரும் உம்மாலே, 'ஸேவ்யம் உபயம் ஸதா வஸதா' என்றபடி அநவரதத்யாநாநுஸந்தாநம் செய்துவந்தது ஸூசிக்கப்படுகிறது. யதிபதிக்கும் பெரியபெருமாளுக்கும் நடந்த கத்யரூப ஸம்வாதத்தை முடிவில் ஸூசிக்கிறார். 'ஸ்ரீமந்நாராயணன் ஸமஸ்த விபத்துக்களிலிருந்தும் என்னை உத்தாரணம் செய்யவேணும்' என்று நாடக முதல் மங்களச்லோகத்தில் த்வயரீதியில் ப்ரார்த்தனை முடிவிலும் அந்த நினைவு. 'ந பயமநுத: க்லேசலேசம்' 'ந ஶோகோ ஸஹாம்ஸம்' ராஹோர்முகாத் ப்ரமுக்தம்– ராகுவாய்ப்பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட, ராகாஶஶாங்கமிவ– பூர்ணிமாசந்த்ரனைப்போலே, புமாம்ஸம்– புருஷனை, ஏவம்– இப்படி, அபாஸ்த ஸமஸ்தமலம்– ஸகலமலங்களும் நீங்கி (ஸம்ஸாரத்திலிருந்து மோசிதனாகி விஷ்ணுபதம் சேர்ந்தவனாய்) பஶ்யாமி– பார்க்கிறேன், அதியஸ–என்ற இந்த பாக்யஸித்தியினாலே, இப்படி மநோரத பூர்ணஸித்திக்குப் பிறகு இதனிலும் மேல் என்ன ப்ரியம் வேண்டுவதற்குளது. ச்ருதி முக்திபெறுமவனை க்ரஹத்திலிருந்து முக்தனான பூர்ணசந்த்ரனுக்கு உவமையிட்டதை இங்கே அநுஸரிக்கிறார். 'வதனேந்துரிவ ஸீதா நிரஸ்தம் ராஹுக்ரஸ்தாத் விமுக்தம்' என்ற துக்கஸாகரமக்ந ஸீதாவர்ணநத்தையும், திருவடியிடமிருந்து அங்குளீயகத்தைத் திருக்கையில் வாங்கிப் பார்க்கையில் 'தாம் து ஸீதாநநம் தஸ்யா: தாம்ரஶுக்லாயதேக்ஷணம் । அஶோபத விஶாலாக்ஷ்யா: (ஸஹஸ்ர ஹர்ஷோத்புல்ல) ராஹுமுக்த இவோடுராட்' என்று துக்கஸாகரோத்தீர்ண ஹ்ருஷ்ட ஸீதா முகசந்த்ரவர்ணநத்தையும் இங்கே நினைக்கிறார். நாடக முதலங்கத்திலும் ஸீதை நினைவே. இங்கே உபஸம்ஹாரமென்னுமங்கம். 'காயோத்பந்நஸமாஹ்ருதிர்நிர்வஹணம்' என்று அதன் லக்ஷணம்.

அபிச–

அவாந்தரோஷ்யோ ஶாயாமி ஹ: ஸ்வயம்
ஜயிஶாயிதஸாதி ஶோபிதகிந்யா
ஹஸ்தந்யஸ்ய வா । ஸாணிவோந:

அபுநராவ்ருத்திம் பஜத்யநக: பூருஷ:
கிமிஹ பஹுபி: க்ரீடத்யக்ரே ஸமீ
ஹிதஸித்திர் ந: ||

எனக்கு இதற்குமேல் என்ன வேணும். என்னுடைய இஷ்டத்தின் ஸித்தி என் முன்னே விளையாடி ஆநந்த நர்த்தநம் செய்கிறதே என்று ப்ரபாவளி உரையில் அவதாரிகை. இந்த நாடகத்தின் முடிவு பயன் மோக்ஷலக்ஷ்மீ நர்த்தநம். மாயாமோஹ: — மாயையான ப்ரக்ருதி மஹாமோஹம், அபுநருதய: ஸூ ஶயிதாயித:- மறுபடியும் கிளம்புவதற்கில்லாமல் மடிந்து பூமியில் படுக்கவைக்கப்பட்டது. மண்ணாய்ப்போயிற்று. ஸம்ஸாரமெனும் மாயா ராத்ரி ஸங்கல்பஸூர்யனுதித்ததும் தொலைந்தது. இனி நித்யப்பகலே. இருட்டுக்கு மோஹராத்ரிக்கு இனி உதயமில்லை. 'ஸக்ருத் திவா ஹைவாஸ்மை பவதி ய ஏதாம் ப்ரஹ்மோபநிஷதம் வேத' என்று சாந்தோக்யோபநிஷத்து. இந்த ப்ரஹ்மவித்துக்கு ஸக்ருத் திவா ஹைவ பவதி ஸதைவாஹஸ் ஸம்பவதி' என்று அங்கு பாஷ்யம். 'ந ஹ வா அஸ்மா உதேதி ந நிம்லோசதி' என்று அதன் பூர்வ வாக்யம். ஸங்கல்ப ஸூர்யோதய விஷயத்திலும் அதன் பலமாக முக்திபெறும் ஜீவனுக்கு உதிக்கும் தர்மபூத ஓர் விபுஸ்வபாவபூர்ணாவிர்பாவரூப ஜ்ஞாந ஸூர்யோதயத்திற்கும் வைத்துக்கொள்ளவேணும். 'ஸததம் ஸர்வ விஷயக ஸாக்ஷாத்காரோ பவதீத்யர்த்த:' என்று உபநிஷத்பாஷ்யம். இவனுடைய ஜ்ஞாநம் ஒரே க்ஷணத்தில் ஸர்வவிஷயஸம்பந்தியாவதை உதிக்கும் ஸூர்யன் ஏகக்ஷணத்தில் ஸர்வத்தோடும் தன் ப்ரகாசத்தால் ஸம்பந்தப்படும் த்ருஷ்டாந்தத்தால் தத்வமுக்தாகலாபத்திலும் பரமபதஸோபானத்திலும் காட்டினார். பவ்யா — புவனமங்களமான, ஶௌரிபக்தி: — விஷ்ணுபக்தியாகியதாங்கள், (மோஹம்தொலையவே) ஸ்புரதி— ப்ரகாசித்து விளங்குகிறீர். பவத்யநுபவா — தடையின்றியில் பிறவி

வெண்மையாய் ப்ரபாதம்போல், திருமுகம் போல் சுற்றிலும் பரவுகிறது. நாடக முதல் மங்கள ச்லோகத்தில் முன்பாதியில் விஷ்ணு பக்தி வ்ருத்தியெனும் பொழுதுவிடிவில் ஸம்ஸ்ருதிராத்ரியின் தொலைதலும், விஷ்ணு ஸங்கல்பஸூர்யோதயமும் உத்க்ருஷ்ட ப்ரயோஜனமாக குறிக்கப்பட்டது. அதன் பூர்ண ஸித்தி இங்கே குறிக்கப்படுகிறது. ஸரணி ரேவாந: அபுநராவ்ருத்திம்— ஸம்ஸாரிகளுக்கு சுழலுக்குத் திரும்பிவாராத மார்க்கத்தை, சாந்தோக்ய முடிவுவாக்யத்தில் (பகவானுடைய ஸபாமண்டபத்தைச் சேர்ந்ததைக் கூறிய வாக்யத்திற்கடுத்தாற்போல்) 'ப்ரஹ்மலோகமபிஸம்பத்யதே ந ச புநராவர்த்ததே ந ச புநராவர்த்ததே' என்று கூறப்பட்டதையும், அந்த வாக்யத்தின் ஸூசனத்தோடு முடியும் அநாவ்ருத்திஸூத்ரத்தையும் நாடக முடிவில் ஸூசனம் செய்து நாடகோபஸம்ஹாரம் செய்கிறார். அநக: பூருஷ:— ஸகல கல்மஷங்களும் நீங்கி அத்புதமான புருஷன், பஜதி— அடைகிறான், (முன்பு நிரந்தரம் பஜநம் செய்துவந்து இப்பொழுது அடைகிறான்) கிமிஹ பஹுபி: - அதிகப்பேச்சுக்கென்ன விடம். ந: ஸமீஹிதம்— நாம் மிகவும் விரும்பி ஆசைப்பட்டது, அத்ய- இப்பொழுது, அக்ரே- நம் முன்னே, க்ரீடதி — குதித்து விளையாடுகிறது.

இனி என்ன கேட்கவேண்டுமம்மா. ஆயினும் உலகமெல்லாம் இந்த மோக்ஷ வாழ்வு பெற்று நித்யமும் வாழவேண்டுமென்று பராசரபகவானும், ப்ரஹ்லாதபகவானும், ஆழ்வார்களும் ஆசாஸனம் செய்ததுபோல நானும் ஆசாஸனம் செய்யும் பரதவாக்யமிது. என்னவென்றால்,

பரதவாக்யம்

அஜீகர்த்துக்ஷமாஷியய: நித்யயோகாத்
விஹாரசேஷ்யாய ஶூ: ஸ்வஶ்ரூத்தர்வஸ்
யாமாஸிஷ் வாரவதீத | ஶிவ: ஶ்ரீமா

ஙிரவயி஢யாவஸிஙுர௱ஷிநு ஹூவெஙு
வக்தா ஶ்ரோதா வவநவிஷயஃ வீூய
தாം வாஸுதேவஃ ॥

இது ‘ப்ரசஸ்தி’ எனும் அங்கம். ‘ஹுஶ ஷிஃ ஶுஹஶாவஸநம்’ என்று மங்களாசாஸனம் செய்வது. மோக்ஷத்திலும் மேற்பட்ட மங்களமில்லை, ‘ந ஊெகுதஃ ஸெளஹா஗்யம்’. அந்த ஸௌபாக்யமங்களம் உலகம் முழுவற்குமுண்டாகவேண்டும். மாலதீமாதவ நாடகப்ரஸ்தாவனையில் ‘கல்யாணாநாம் கூவேஷி ஊஹ ஸாம்ஹாஜநம் விஶ்வஊெ ஹிதெதஃ’ என்கிறச்லோகத்தில் ஸம்ஸாரமண்டலத்திலுள்ள ஸுர்யோதயத்தையே உலகமங்களமாக வர்ணித்தது. ஸம்ஸாரராத்ரியைத் தொலைத்து நித்ய விபுஜ்ஞாநஸுர்யோதயமாகும்ஸங்கல்பஸுர்யோதயத்தின் மங்களத்தை என்ன சொல்வது. ஸர்வஜீவராசிகளும் பகவானுடைய கருணையால் இந்த ஸங்கல்பஸுர்யோதயமேற்பட்டு ரக்ஷிக்கப்படவேணும். ‘கூஶஷஹஜெலு’ என்று பராசரபகவான் ஆசாஸித்தபடியே இங்கே முதலங்கத்தில் ‘கூஶஷஹஜெலு’ இந்த நாடகரசனை செய்யப்பட்டதென்று ச்லோகத்தில் ஸாதிக்கப்பட்டது. இங்குமப்படியே உலகம் முழுவதும், ஊகஷாஷயஃ – கலக்கங்கள் நீங்கிய புத்திதெளிவு உடையவராய், நித்யம் – எப்பொழுதும், ஊயூாதவிஷயம் – மோக்ஷ மார்க்கமான ஸர்வாந்தர உள்ளுயிரைப்பற்றிய ப்ரஹ்மவித்யையை, ஊஜீகூவஷெ – ஒப்பிப் பயிற்சி செய்யட்டும். கீதையின் ஸ்மரணமும் பக்தியோகஸ்மரணமும், கீதை முடிவான சரமச்லோகஸ்மரணமும், சரமச்லோகத்திலுள்ள மோக்ஷணஸங்கல்பஸ்மரணமுமிங்கு திண்ணம். இரண்டாமடியில் ‘வஸுயாம்’ என்று பூமண்டலத்திற்கே இந்த மோக்ஷக்ஷேமமார்க்கங்களும் மோக்ஷபலமும் ஆசாஸனம் செய்யப்படுகிறது. நித்யம் என்பதால் ‘ஊயூாதஜ்ஞாநநித்யஷம்’ என்ற கீதையின் நினைவு. க்ஷிஷஃ வாரவதீஃ – க்ஷேபங்களின் எல்லையான ஒரு படனையும் ஆசாஸிக்காத (உத்தேசிக்காத) நிஷ்காமமான, க்ஷெவ்ா யஊஃ – க்ருதயுகதர்மமான ஆசையற்ற நிவ்ருத்திதர்மம், வஸுயாம் – ஸம்ஸாரமண்டலம் முழுவதையும், ஸ்ருஶது – தொடட்டும். ‘கல்யாணஊவஹது காதஜ யாஹம் ஷயஊம் ஹுவ்ாவயநு ஹுணி ஹிதெஷு நராஷிகெஷு । க்ஷம் கூவெ யிமதா ரயஊஷு வகும் வஸுஷதாம் வஷ ஸிகாஶூதாவஸொ நஃ’ என்ற ச்லோகத்திற்போல இங்கும் நர, நாராயண, திருவஷ்டாக்ஷராதிகளின் நினைவுகள். ஊஷிநு ஹுவெஙு – இந்த ப்ரபந்தத்தில் (திவ்யப்ரபந்தம் போன்ற இந்த நாடகப்ரபந்தத்தில்) வக்தா – ரசனைசெய்து கூறுபவரும், ஶ்ரோதா – கேட்பவரும், வவநவிஷயஃ – கூறப்படுபவருமாகிய மூன்றுமான, வாஸுதேவஃ – ‘வாமீஶாவ்ா வாஸுதேவஸ்ய ஊஹிதீஃ’ என்று முதலங்கத்தில் கூறப்பட்ட லக்ஷ்மீஹயக்ரீவவாஸுதேவமூர்த்தியான, ஶ்ரீஊநுதெவஃ – ‘திவ்யோ தேவ ஏகோ நாராயணஃ’ என்று கூறப்பட்ட ஸர்வபூதஹ்ருதயவாஸியும், ஸர்வாவாஸனுமான, ஙிரவயி஢யாவஸிஙுரஃ – எல்லையற்ற கருணாஸாகரமான ஶ்ரிய:பதியான தேவன், வீூயதாம் – இந்த ப்ரபந்தத்தில், இதன் அபிநயப்ரயோகத்திலும் திருவுள்ளமுகக்கவேணும். ‘நாயவீூதெஸ்’ இந்நாடகம் செய்யப்பட்டதென்று முதலங்கத்தில் கூறியது. கர்த்ருத்வாதிஸமர்ப்பணம், பலஸமர்ப்பணம். ‘வணங்குமாறறியேன் மநமும் வாசகமும் செய்கையும் யானும் நீதானே.’ ப்ரஹ்மார்ப்பணந்யாயம், ‘வஞ்சகக்கள்வன் மாமாயன் மாயக்கவியாய் வந்து என் நெஞ்சுமுயிருமுண்கவந்து’ ‘நெஞ்சுமுயிருமவையுண்டு தானேயாகி நிறைந்தானே’ ‘தானேயாகி நிறைந்து எல்லாவுயிரும் தானேயாய்த் தானே யானென்பானகித் தன்னைத்தானே துதித்து’ என்ற அநுபவங்கள். அஹங்காராவேசத்தால் இவ்வநுபவம் ஸுலபம். ஸர்வத்ர உள்ளுயிராய் வஸிப்பதும்

ஸர்வ உயிர்களுக்கும் ஆவாஸமுமான வாஸுதேவனுக்குள் 'வாஸுதேவே ப்ரவிஷ்டயோ:' என்ற தேவஸந்நிதிநிலையில் புகுந்து, அந்த உள்ளுயிரான ஆநந்தமய இன்பக்கடலில் முழுகியிருக்கையில் எல்லாமவன் செயலே, அவன் பாடலே, 'ஸ்தவ்ய: ஸ்தவப்ரிய: ஸ்தோதா' என்ற ஸஹஸ்ரநாமத்தின்படி நாதனே தன்னைப் பாடிக்கொள்ளவேணுமென்று தேவநாயக பஞ்சாசத்தில் 'ஸ்தவ்ய: ஸ்தவப்ரிய இதீவ தவாபிதாநம் ஸ்தோதேதி ச க்ஷமஸி யாநவே ஸ்த்ருஷ்டம்' என்று ப்ரார்த்திக்கப்பட்டது. இந்த புருஷனுடைய ஹ்ருதயத்தில் வீற்றிருந்த வாஸுதேவன் எல்லோர் ஹ்ருதயங்களிலும் எல்லோரையும் மோக்ஷணம் செய்வதற்கே வீற்றிருக்கிறார். எல்லோரும் மோக்ஷமடையும் வழியாகவே இந்த நாடகப்ரபந்தத்தையும் அவர் என் நெஞ்சிலிருந்து பாடியுள்ளார். அவர் ப்ரீதிக்கே பாடியுள்ளார். நான் த்வாரமாக ஸஹகரித்திருந்தாலும் அதுவும் அவர் ப்ரீதிக்கே ஸமர்ப்பிதம். வெள்ளைப்பரிமுகரான வாஸுதேவமூர்த்தி எம்முள்ளத்திலே யழியாது ஒலியிலிட்டனம் யாம்.

ப்ரபாவிலாஸ உரையில் இந்த பரதவாக்யத்தோடு நாடகம் முடிகிறது. 'ஸ்தோதாரம்' என்கிற அடுத்த ச்லோகம் ப்ரபாவளீ உரையிலுள்ளது. 'ப்ரீயதாம்' என்பது எல்லோரிடமும் ப்ரீதராய் மோக்ஷாநுக்ரஹம் செய்யட்டும். இந்த மோக்ஷஸங்கல்பஸூர்யோதயம் விச்வத்தை வ்யாபிக்கட்டும். 'தத்ர காசிதஹார்த:' என்கிறபடியே ஹார்தனை ஈச்வரனுடைய ஸௌஹார்தத்தாலே காட்டப்படுகிற அர்ச்சிராதிமார்க்கத்தாலே' என்று ஸாதித்ததையும் நினைக்கவேணும். வாஸுதேவசப்தத்தின் வ்யுத்பத்தியாலிது நன்கு விளங்கும். 'இளைய புன்கவிதையேலும் எம்பிராற்கு இனியவாறே' என்று திருமாலை முடிவைப்போலும், 'தேனுள பாதமலர் திருமாலுக்குத் தித்திக்குமே' என்று பாடியது போலவும்.

கடைசி ச்லோகம்

ஸ்தோதாரம் நிந்திதாரம் ஸ்வஹ்ருதயமதவா
ஸோதாஸீநம் ஸமூஹம் ஜகதிதம் ந்ருஸிம்ஹ
ஸந்தத்விஷந்தாவஸ ஸாதவ்ய ஸாவம்
தஸ்யாஷாம் | ஶிஷ்யா: ஶிக்ஷிதவாம்ஸ
ய: ச்ருதிவசஸ பஸ்தாம் வயம் ஸ்ய ச
நஸ்தத்ஸ்த க்ஷோஷ ஸங்கீர்ணக்ஷமித்ம
ஸாமந்தரை: கிம் வசோபி: ||

அஸ்யார்த்த:— வக்தா ச்ரோதா என்ற முன் ச்லோகத்தில் ஸாதித்தபடி வக்தாவாகிய வாஸுதேவமூர்த்தியான ஹயக்ரீவன் என் உள்ளத்தில் எழுதினதை வாத்யத்தாலே போல என் முகத்தாலே வெளிவந்த இந்த ப்ரபந்தத்தை, ஸமூஹம் ஜகத் — கூனுளநெஞ்சுகளோடும் கூடிய பண்டிதலோகம், கௌடில்யமும் அவைதுஷ்யமுமுடையவரும் கலந்த லோகம், 'ஜகத் ஸமூஹம்' என்றுமந்வயிக்கலாம். உலகம் ஒன்றுகூடி என்று கருத்து. ஈசாவாஸ்யத்தில் 'பூஷந்நேகர்ஷே' என்ற மந்த்ரத்தில் 'ஸமூஹ தேஜ:' என்றவிடத்தில் 'ஸமூஹ' என்பதற்கு ஸமூஹம் குரு என்ற இந்த ஸ்வாமியின் வ்யாக்யாநம் இதற்குச்சான்றாகும். ஸ்தோதாரம் — ஸ்துதிசெய்யவும், நிந்திதாரம் — இகழவும், அதவா ஸோதாஸீநம்— கிடந்தால் கிடக்கட்டுமென்று உதாஸிக்கவும், ஸமூஹம் (ஸங்காநாம்) — திரும்பவும் திரும்பவும் கூட்டங்கள் கூடி சர்ச்சை செய்யட்டும். எள்ளத்தனை புசவாது இகழாது என் நெஞ்சம். அந்தத்விஷந்தாவஸ ஸாதவ்ய ஸாவம் தஸ்யாஷாம்: கிம் ஹீநம் - 'வழிபட்டோடவருள் பெற்று மாயன் கோலமலரடிக்கீழ் சுழிபட்டோடும் சுடர்ச்சோதி வெள்ளத்தின்புற்றிருந்தாலும் இழிபட்டோடும் உடலினிற் பிறந்து தன் சீர் யான் கற்று மொழிபட்டோடும் கவியமுத நுகர்ச்சி உறுமோமுழுதுமே' என்ற பாசுரத்தில் கண்ட இரண்டு இன்பரஸங்களிலும் இந்த க்ரந்தரசனைகாலத்

தில் மூழ்கியுள்ளோம். மாயக்கவி உள்ளிருந்து பாடுகையில் அதன் சுவையும் இனிக்கிறது. அநந்தன் ஸ்வரூபம், அநந்தகுணங்கள் இவற்றின் ரஸத்திலாழ்த்துகிறது. காவ்யரஸத்திலும் மனம் ஆழ்கிறது. ‘ஶ்ரோ நாதீஷு ஸர்வதோபாஸ்யமாநாஸு ஸாந்த்ரீகரஸிதே ரஹிதே ஹரதஃ ஸூக்தயே’ என்பதும் அநந்தசிந்தநரஸமக்நதையாகும். அநந்தனுடைய அநந்தகல்யாணகுணாநுபவ இன்பரஸத்தில் மூழ்கியிருந்த, ரஸத்திலேயே நிலையாக நின்ற எமக்கென்ன கெட்டுப்போகும். ஶ்ருதிவர்த்மநி— அத்யாத்ம ச்ருதிமார்க்கத்தில், யேஷாம் — எந்தப் பெரியோர்களால், (நாம்) ஶிக்ஷிதபூர்வா: ஶிஷ்யா: — கற்பிக்கப்பட்ட சிஷ்யர்களோ, (அந்த வேதாந்தமார்க்கத்தில்) யே ச— எவர்கள், ந:— எம்முடைய, ஶிக்ஷிதபூர்வா: ஶிஷ்யா:— கற்பிக்கப்பட்ட சிஷ்யர்களோ, தத்ஸந்தோஷஸமர்பணக்ஷமமிதம் — அப்பெரியோர்களுக்கும் அந்த எம் சிஷ்யர்களுக்கும் ஸந்தோஷத்தை ஸமர்ப்பிக்கவல்லது இப் பிரபந்தம். சிஷ்யர்களுக்காக ஆசார்யர்கள் சேஷத்வத்தை வஹித்து அவர்கள் மனத்தில் தத்வங்கள் நன்று விளங்கி நிலைநிற்கும்படி செய்யும் பணியுண்டு. அதனால் ஸந்தோஷ ஸமர்ப்பணம் என்பது அவர்கள் விஷயத்திலும் பொருந்தும். ஸாம்யம்பசௌ: கிம்— வெறும் ஆடம்பரம் செய்யும் மற்றவரைப்பற்றி யென்ன சிந்தை.

இது சாரீரக நாடகம். சாரீரக ஸூத்ர பாஷ்யாதிரஸபரிதராயிருக்கவேணும் இதன் சுவை யறிய. அந்த ரஸங்களை யறிந்தவர் குருக்கள் குழாமும், இந்த ஸூத்ரபாஷ்யாதிகளை இக்கலிகாலத்திலும் பின்பும் ஓதியுணர்ந்தவர், இவர்களெல்லோரும் ‘ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய:’ என்னும் தனியனை யநுஸந்தித்துக் காலக்ஷேபம் செய்தவர். ஆகையால் ஸ்ரீ வைஷ்ணவலோகம் முழுவதும் ப்ரஹ்மஸூத்ர பாஷ்யாதி க்ரந்தங்களைப் பற்றியவரையில் ‘யே ச ந:’ என்ற வகுப்பில் சேர்ந்தவர்கள். ஸ்ரீ வைஷ்ணவலோகம் முழுவதும் இதில் சுவைப்பரென்பதில் ஐயமில்லை.

ஸ்ரீஸங்கல்பஸூர்யோதயம் முற்றிற்று.

கவிதார்க்கிகஸிம்ஹாய கல்யாணகுணஶாலிநே ।
ஸ்ரீமதே வேங்கடேஶாய வேதாந்தகுரவே நம: ॥

॥ ஶுபமஸ்து ॥

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

[துர்முகி ௵ உத்தராயணம் - க்ரீஷ்ம ருது - மிதுந௴ 1956 ஜுன் - ஜுலை௴]

14-6-56	ஆனி௴ 1௳	வியாழக்கிழமை	மிதுநரவி 19-44 ஷடசீதி ஸங்க்ரமண தர்ப்பணம்; சூன்ய திதி.
15-6-56	2௳	வெள்ளிக்கிழமை	சூன்ய திதி.
18-6-56	5௳	திங்கட்கிழமை	ஏகாதசி திதி.
19-6-56	6௳	செவ்வாய்க்கிழமை	ஏகாதசி வ்ரதம். ஸ்வாதி; பெரியாழ்வார் திருநக்ஷத்திரம்.
21-6-56	8௳	வியாழக்கிழமை	அநுஷம்; ஸ்ரீமந்நாதமுனிகள் திருநக்ஷத்திரம்,
22-6-56	9௳	வெள்ளிக்கிழமை	○பூர்ணிமை திதி.
23-6-56	10௳	சனிக்கிழமை	ப்ரதமை திதி.
24-6-56	11௳	ஞாயிற்றுக்கிழமை	த்விதீயை திதி.
25-6-56	12௳	திங்கட்கிழமை	அதிதி.
4-7-56	21௳	புதன்கிழமை	ஏகாதசி.
6-7-56	23௳	வெள்ளிக்கிழமை	த்ரயோதசி- சதுர்தசி திதித்வயம்.
7-7-56	24௳	சனிக்கிழமை	●அமாவாஸ்யை.
13-7-56	30௳	வெள்ளிக்கிழமை	மிதுந சுக்லஷஷ்டி திதி.
14-7-56	31௳	சனிக்கிழமை	ஸப்தமி திதி.
15-7-56	32௳	ஞாயிற்றுக்கிழமை	மிதுந சுக்ல அஷ்டமிதிதி. கடகரவி - 56—52; தக்ஷிணாயநபுண்யகாலம்; ஸங்க்ரமண தர்ப்பணம்.

[தக்ஷிணாயணம் க்ரீஷ்மருது கர்க்கடக௴]

16-7-56	ஆடி௴ 1௳	திங்கட்கிழமை	சூன்ய திதி
17-7-56	2௳	செவ்வாய்க்கிழமை	சூன்ய திதி
18-7-56	3௳	புதன்கிழமை	ஏகாதசி. (சயந ஏகாதசி)
22-7-56	7௳	ஞாயிற்றுக்கிழமை	பூர்ணிமை; சாதுர்மாஸ்யஸங்கல்பம்; உத்திராடம்; ஸ்ரீ ஆளவந்தார் திருநக்ஷத்ரம்; **16**-வது வார்ஷிக ஸ்ரீ மாலோல வித்வத்ஸதஸ் ஆரம்பம்.
24-7-56	9௳	செவ்வாய்க்கிழமை	ருக்ப்ரதமோபாகர்மா.

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam,
Sri Ahobilamutt, at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur.
Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T.
Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வீரராகவசடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:

ஸ்ரீ அஹோபிலமடம்

பள்ளிக்கூடங்கள்

இந்துமதத்தைக் காப்பாற்றவேண்டும் என்றும் வைதிக ச்ரத்தை மறையாமலிருக்க வேண்டுமென்றும் சிறுவயது முதற்கொண்டே நமது பாலர்களுக்கு நற்பழக்கவழக்கங்களையும், உயர்ந்த கல்வியையும் ஸாதித்துக் கொடுக்கவேண்டுமென்ற நோக்கங்களில் பலவிடங்களில்பள்ளிக்கூடங்களை ஸ்ரீமதழகியசிங்கர்மூன்று வருஷங்களுக்குமுன் ஸ்தாபித்தாயிற்று.

பிள்ளைகள் அரசாங்கப் பரீட்சைகளுக்குச் சென்று தேர்ச்சி பெறவேண்டுமெனப் பெற்றோர்கள் ஆசைப்படுவதால் அம்மாதிரியான அரசாங்கப் பாடத்திட்டங்களும், வகுப்பு முறைகளுமே அநுஸரிக்கப்பட்டு வருகின்றன. சென்ற எப்ரல் மீ மதுராந்தகத்திலிருந்து கவர்ன்மென்ட் E. S. L. C. பரீட்சைக்கு அனுப்பப்பட்ட எழுபிள்ளைகளில் ஆறுபிள்ளைகள் நல்ல மார்க்குகள் வாங்கித் தேர்ச்சி பெற்றனர். உத்திரமேரூரில் ஒரு வித்யார்த்தி ஷெடி பரீட்சைக்கு அனுப்பப்பட்டு அவன் பாஸ் செய்திருக்கிறான். அதுமட்டிலில்லாமல் இந்த ஒரு வித்யார்த்தி ஒன்பது பிள்ளைகளுடன் ஓர் இடத்தில் (Center) பரீட்சை எழுதியதில் நமது பள்ளிக்கூடத்திலிருந்து பரீட்சைக்குச் சென்ற இந்த ஒருவனே பாஸ் செய்திருக்கிறான்.

மற்றும் கவர்ன்மென்ட் பரீட்சைகளுக்கும் காலக்ரமத்தில் நமது பிள்ளைகள் மேல் வகுப்புக்களுக்கு வந்தவுடன் அனுப்பப்படவிருக்கிறார்கள்.

இவ்வளவு முயற்சிகள் செய்தும், நல்ல கல்விமுறை அநுஷ்டிக்கப்பட்டும் பரீட்சையில் நல்ல வெற்றி அடைந்தும், பெருவாரியாக நமது ஸமூஹத்தினர் நமது பள்ளிக்கூடங்களின் நற்பலன்களை அடைந்திருக்கிறார்கள் எனக் கூறுவதற்கில்லை.

ஆரம்ப வகுப்புக்களில் பெண்குழந்தைகளையும் சேர்த்துக்கொள்ள ஸ்ரீமதழகியசிங்கர் அநுமதியளித்தாகியிருக்கிறது.

ஆகையால் ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் நமது ஸ்ரீ அஹோபிலமடத்துப் பள்ளிக்கூடங்களில் நமது ஸமூஹத்திலுள்ள எல்லோருமே தங்களுடைய குழந்தைகளை அனுப்பி அதனால் ஏற்படும் நற்பலன்களை நமது ஸமூஹத்திற்குத் தேடிக் கொடுப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மற்றைய பள்ளிக்கூடங்களில் உள்ள தேர்ச்சி முறையை அநுஸரித்து அந்தந்த வகுப்பில் படிக்கும் நமது பள்ளிக்கூட மாணாக்கன் தேர்ச்சியில் குறைந்தவன் இல்லை என்பது நடந்த வருஷப் பரீட்சையிலிருந்து தெரிந்துகொண்ட விஷயம்.

* நம் ஸம்ஸ்க்ருதகலாசாலையிலிருந்து சிரோமணி பரீக்ஷைக்கு அனுப்பப்பட்ட மாணவர்களனைவரும் மிக்க சீரிய முறையில் தேர்வு பெற்றிருக்கின்றனரென்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். அதிலும் ஒருவன் முதல்வகுப்பிலும், இருவர் இரண்டாம் வகுப்பிலும் தேர்வுபெற்றிருப்பது குறிப்பிடற்பாலது.

தி. ராமஸ்வாமி,
ப்ரின்ஸ்பால், ஸ்ரீ அஹோபிலமடம்
ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.